# அரசு வினாத்தாள் திட்டவரைவு அடிப்படையில்
# வினா - விடை வங்கி

## பத்தாம் வகுப்பு – தமிழ் முதல்தாள்

### ஒரு மதிப்பெண் வினா-விடை

### குறுவினாக்கள் (2 மதிப்பெண்)

### *செய்யுட்பகுதி*
**(இயல் 1,3,5,6,7,9)**

1. **உயிரினும் ஓம்பப்படுவது எது? ஏன்?**
    1. **ஒழுக்கம்**
    2. அனைத்துச் **சிறப்புகளையும்** தரவல்லது

2. **ஒழுக்கத்தால் எய்துவது எது? இழுக்கத்தினால் எய்துவது எது?**
    1. ஒழுக்கத்தால் எய்துவது **மேன்மை.**
    2. இழுக்கத்தால் எய்வது **பழி.**

3. **நன்றிக்கு வித்தாவது எது?**
    1. நன்மைக்கு விதையாவது **நல்லொழுக்கம்** ஆகும்.

4. **என்றும் இடும்பை தருவது எது?**
    1. என்னும் துன்பத்தைத் தருவது **தீயொழுக்கம்** ஆகும்.

5. **பல கற்றும் கல்லாதவராகக் கருதப்படுபவர் யார்?**
    1. **உயர்ந்தவரோடு** பொருந்த **வாழும் கல்வி கற்காதவர்** ஆவர்

6. **கூகையையும் காக்கையையும் எடுத்துக்காட்டி வள்ளுவர் விளக்குவது யாது?**
    பகையை வெல்லக் கருதும் வேந்தர், **ஏற்ற காலம் அறிந்து** செயற்படுதல்வேண்டும்.

7. **ஞாலம் கருதினும் கைகூடும். எப்போது?**
    1. **காலமறிந்து இடத்தோடு** பொருந்தச் **செயல்பட்டால்** உலகம் கருதினும் கைகூடும்.

8. **ஞாலம் வெல்லக் கருதுபவர் யாது செய்வார்?**
    1. **காலத்தை எதிர்பார்த்துக் கலங்காமல்** காத்திருப்பர்

9. **ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?**
    1. ஊக்கமுடையான் ஒடுக்கம் பின்வாங்கித் தாக்கும் ஆட்டுக்கிடாயைப போன்றது.

10. **செய்தற்கரிய செயல் செய்வது எப்போது?**
    1. கிடைத்தற்கரிய **வாய்ப்பு அமையும்போது** செய்தற்கரிய செயல் செய்யவேண்டும்.

11. **கொக்கை உவமையாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது?**
    1. கொக்கைப்போல் **அமைதியாகக் காத்திருக்கவேண்டும்.**
    2. கொக்கைப்போல் **காலம் வாய்த்ததும் விரைந்து செயல்படவேண்டும்.**

12. **காலமறிந்து செயல்படுவது எவ்வாறு?**
    1. **தகுந்த கருவிகளுடன் செயல்படவேண்டும்.**

13. **திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**
    1. **முதற்பாவலர்**
    2. **தெய்வப்புலவர்**
    3. **செந்நாப்போதார்**
    4. **பொய்யில்புலவர்**
    5. **பெருநாவலர்**

14. **பாரதிதாசன் திருவள்ளுவரை எவ்வாறு புகழ்ந்துள்ளார்?**
    “**வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே வையகமே**” என்று புகழ்ந்துள்ளார்.

15. **ஏலாதி நூற்குறிப்பு – வரைக.**

1. **பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள்** ஒன்று.
2. சிறப்புப்பாயிரம், தற்சிறப்புப்பாயிரம் உட்பட **எண்பத்தொரு வெண்பாக்களைக்** கொண்டது.
3. **நான்கடிகளில் ஆறு** அருங்கருத்துக்களை நவில்கிறது.
4. இந்நூல் தமிழுக்கு **அருமருந்து** போன்றது.
5. இந்நூலின் நற்கருத்துகள், **கற்போரின் அறியாமையைப் போக்கும்.**

16. **கணிமேதாவியார் – குறிப்பு எழுதுக.**

1. இவர் **ஏலாதி, திணைமாலை** நூற்றைம்பது இயற்றியவர்
2. **கணிமேதையர்** என்ற பெயரும் உண்டு.
3. சமண சமயத்தவர்.
4. **கொல்லாமை** முதலான உயரிய கருத்துக்களை வலியுறுத்தியவர்
5. இவர் வாழ்ந்த காலம் **கி.பி. ஐந்தாம்** நு'ற்றாண்டு.

17. **பழியில்லா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?**

1. பிறர்க்குப் **பணிதல்**
2. **நல்வழியில்** நடத்தல்
3. சான்றோர் **அறிவுரைகளைப் பின்பற்றுதல்**
4. நுண்ணறிவு **நூல்களை ஆராய்தல்**
5. நூல்கள் சொல்லும்படி **வாழ்தல்**

18. **கம்பர் – சிறு குறிப்பு வரைக.**

1. **தேரழுந்தூர்** என்னும் ஊரில் பிறந்தவர்.
2. இவர் வாழ்ந்த காலம் **கி.பி.பன்னிரெண்டாம்** நூற்றாண்டு
3. இவரைத் திருவெண்ணெய் நல்லூர்ச் **சடையப்ப வள்ளல்** ஆதரித்தார்.
4. **கம்பராமாயணம், ஏர் எழுபது, சிலை எழுபது, சரசுவதி அந்தாதி, திருக்கை வழக்கம்** ஆகியவற்றைக் கம்பர் இயற்றியுள்ளார்.
5. **கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும், ஒண்பாவிற்கு உயர் கம்பன், கல்வியில் சிறந்த கம்பன்** – ஆகிய தொடர்கள் கம்பரின் சிறப்பை எடுத்துரைப்பன.

19. **கையுறைப் பொருள்களாகக் குகன் கொண்டு சென்றன எவை? யாருக்குக் கொண்டு சென்றான்?**

1. **தேன், மீன்**
2. **இராமனுக்குக்**கொண்டு சென்றான்.

20. **குகன் இராமனைக் கண்டு எவ்வாறு பணிந்து வணங்கினான்?**

1. இருள்போன்ற நீண்டமுடியுடைய **தலை மண்ணில் படிய, கீழே விழுந்து,** வணங்கினான்.
2. பின் எழுந்து, **வாயைக் கையால் பொத்தி, உடலை வளைத்து அடக்கமாக** நின்றான்.

21. **குகனின் வேண்டுகோள் யாது?**

**ஐயனே தங்களுக்கு வேண்டிய தொண்டு செய்வேன்** என்று குகன் வேண்டினான்.

22. **அன்புள இனி நாம்ஓர் ஐவர்கள் உளரானோம் – யார், யாரிடம் கூறியது?**

**இராமன் குகனிடம்** கூறியது.

23. **அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?**

1. **குற்றம் அற்றவர்**
2. **சிவபக்தி மிக்கவர்**
3. **திருநாவக்கரசரிடம் பேரன்பு** உடையவர்.

24. **அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்தார்?**

தம் வீட்டிலுள்ள,

1. **அளவைக் கருவிகள்**
2. **துலாக்கோல்**
3. **மக்கள்**
4. **பசுக்கள்**
5. **எருமைகள்**
6. **மற்றுமுள்ள எல்லா பொருள்கள்**

எல்லாவற்றிற்கும் திருநாவுக்கரசு எனப் பெயர் வைத்தார்.

25. திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் வினவியதென்ன?

“நீவிர் வைத்த தண்ணீர்ப்பந்தலில் உம்பெயர் எழுதாமல் வேறு ஒருவர் பெயர் எழுதிய காரணம் என்ன? சொல்வீராக” என்று திருநாவுக்கரசு வினவினார.

26. வந்தவர் வாகீசர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார்?

1. கைம்மலர்கள் தலைமேல் குவிந்தன
2. கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருகி வழிந்தது.
3. உரை தடுமாறியது.
4. உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிய, தரையில் வீழ்ந்தார்.
5. திருநாவுக்கரசரின் திருவடித் தாமரைகளைத தலையால் வணங்கினார்.

27. மூத்த திருநாவுக்கரசுக்கு நேர்ந்ததென்ன?

வளமான வாழை இளங்குருத்தினை அரியும்போது, ஒரு பாமபு, கூரிய பற்களால், அவன் உள்ளங்கையைத் தீண்டியது.

28. திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசரை எங்ஙனம் உயிர்த்தெழச் செய்தார்?

சிவபெருமானை அருளும்படி வேண்டி, “ஒன்றுகாலாம்” எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி, பாம்பின் விடத்தைப் போக்கி அருளினார்.

29. நும்பேர் எழுதாதே வேறொருவர் பெயர் முன்னெழுத வேண்டிய காரணம் என்கொல்? – யார், யாரிடம் கூறியது?

திருநாவுக்கரசர் அப்பூதியடிகளிடம் கூறினார்.

30. இப்போது இங்கு அவன் உதவான் – யார், யாரிடம் கூறியது?

அப்பூதியடிகள் திருநாவுக்கரசரிடம் கூறினார்.

31. வயலின் வரப்புகளாகக் கூறப்படுவன யாவை?

வயலின் வரப்புகளாக,

1. வெண்பா
2. ஆசிரியரப்பா
3. கலிப்பா
4. வஞ்சிப்பா

ஆகியவை கூறப்படுகின்றன.

32. வயல் தரும் விளைவுகளாகத் தமிழ்விடுதூது கூறுவன யாவை?

வயல் தரும் விளைவுகளாக,

1. அறம்
2. பொருள்
3. இன்பம்
4. வீடு

என தமிழ்விடுதூது கூறுகிறது.

33. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?

1. அதிவீரராம பாண்டியன்
2. வில்லிப்புத்தூரன்
3. ஒட்டக்கூத்தன்

34. வன்மையுள் எல்லாந் தலையாயது எது?

அறிவில் சிறந்த பெரியோரை உறவினராய் ஏற்றுநடத்தல் தலையாயது ஆகும்.

35. யாருக்குப் பகைவராலும் தீங்கு செய்ய இயலாது?

அறிவில் சிறந்த பெரியோரைச் சார்ந்து நடப்பவருக்குத் தீங்கு செய்ய இயலாது.

36. கெடுப்பார் இலானுங் கெடுபவர் யார்?

பெரியாரின் பாதுகாப்பைத் தேடிக்கொள்ளாத அரசன் ஆவான்.

37. நல்லார் தொடர்பு கைவிடல் எத்தன்மையது?

பலரைப் பகைத்துக்கொள்வதைவிடப் பல மடங்கு தீமையானது.

38. பொருளல்லவரைப் பொருளாகச் செய்வது எது?

பொருட்செல்வம் ஆகும்.

39. பகைமை இருளைப் போக்குவது எதுவென வள்ளுவர் கூறுகிறார்?
செல்வம் என்னும் அணையா விளக்கு ஆகும்.

40. வேந்தற்குரிய பொருள்கள் எவை?
1. அரசுரிமையால் வந்த பொருள்
2. வரிப்பொருள்
3. அரசனின் பொருள்

41. தேவாரம் – பொருள் எழுதுக.
தெய்வத்திற்குச் சூட்டப்பெற்ற பாமாலை ஆகும்.

42. சிவபெருமான் எத்தன்மையன் என நாவுக்கரசர் கூறுகிறார்?
1. எவர்க்கும் ஆட்படாதவன்
2. அழகிய வெண்சங்கினைக் காதில் குழையாக அணிந்தவன்

43. ஆற்றுதல் என்பது யாது?
வருந்தி வந்தவர்க்கு உதவுதல் ஆகும்.

44. பண்பு எனப்படுவது யாது?
சான்றோர்வழி அறிந்து வாழ்தல் ஆகும்.

45. அறிவு எனப்படுவது யாது?
அறிவற்றவர் சொல் பொறுத்தல் ஆகும்.

46. கலம்பக நூல்களுள் முதல்நூல் எது?
நந்திக் கலம்பகம் ஆகும்.

47. கலம்பக உறுப்புகள் நான்கனை எழுதுக.
1. தழை
2. தவம்
3. சித்து
4. களி

48. நந்திக் கலம்பகம் யார்மீது பாடப்பெற்றது?
பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன்மீது பாடப்பெற்றது.

49. நந்திவர்மன் வீரம் எத்தகையது?
நந்திவர்மனின் தாமரைமலர்போன்ற திருவடிகளை வணங்காத அரசர், தேவர் உலகத்தை ஆள்பவர் ஆவர்.

50. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?
நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் ஆகும்.

51. குலசேகரர் எவ்வெம் மொழிகளில் வல்லவர்?
1. வடமொழி
2. தென்மொழி

ஆகியவற்றில் வல்லவர்.

## ***உரைநடைப் பகுதி***

(இயல் – 1,5,6,7,8,9,10)

1. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய. இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?
மூவாயிரம் ஆகும்.

2. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது?
இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழிமுறைகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது என்றார்.

3. தமிழ் மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.
1. இயல், இசை, நாடகம் என்னும் முப்பிரிவுகளையும் உடையது.
2. அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்துள்ளனர்.
3. இறவா இலக்கிய, இலக்கண வளம் கொண்டது.

4. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை?
    1. தொன்மை
    2. தாய்மை
    3. தனிமை
    4. செம்மை

5. ஒருமொழி நிலைபெற்று நிற்பதற்குரிய தகுதிப்பாடுகள் யாவை?
    1. பேச்சுமொழி
    2. எழுத்துமொழி
    3. ஆட்சிமொழி
    4. நீதிமன்றமொழி
    5. பயிற்றுமொழி என அமையவேண்டும்.

6. மொழிமாற்றம் என்றால் என்ன?

    ஒரு மொழிப்படத்தை மற்ற மொழியில் மாற்றி அமைத்தல் ஆகும்.

7. கல்விப்படங்கள் வாயிலாக நாம் அறிவன யாவை?
    1. பல்வகை விலங்குகளின் வாழ்க்கை
    2. பன்னாட்டு மக்களின் வாழ்க்கை

8. திரைப்படச்சுருள் பற்றி நீவிர் அறிவன யாவை?
    1. செல்லுலாய்டு என்னும் பொருளால் ஆனது.
    2. எதிர்ச்சுருள் எனப்படும்.
    3. ஒலி, ஒளி ஆகியவற்றைத் தனித்தனியாக அமைப்பர்.

9. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?
    1. பஃறுளி ஆறு
    2. குமரி மலை

10. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?
    1. மதுரைக்காஞ்சி
    2. பட்டினப்பாலை

11. ஞாலம் – பெயர்க்காரணம் கூறுக.

    ஞால் என்பதற்குத் தொங்குதல் என்று பொருள். எவ்விதப் பற்றுக்கோடுமின்றி அண்ட வெளியில் உலகம் தொங்குவதால், ஞாலம் எனப்படுகிறது.

12. கண்ணிடத்து அப்பியவர் யார்? இதில் கூறப்படும் செய்தி யாது?
    1. கண்ணிடத்து அப்பியவர் கண்ணப்பன்.
    2. ஊனுக்கு ஊன்

13. அமெரிக்க இதழாசிரியரிடம் காந்தியடிகள் பற்றிப் பெண்மணி கூறியது யாது?

    “காநதியடிகள் நூலில்தான் உலகம் உய்ய உற்றவழி இருக்கின்றது” என்று பெண்மணி கூறினார்.

14. காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது?
    1. தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை
    2. தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்
    3. உண்மைப் பொருண்மை உண்டு

15. இயேசுவின் மலைப்பொழிவு நூலைப் படித்துக் காந்தியடிகள் உணர்ந்தது என்ன?
    1. தீயவனை எதிர்க்காமல், அவனின் தீமையை எதிர்த்து நிற்கவேண்டும்.
    2. பகைவனிடம் அன்பு காட்டவேண்டும்.

16. காந்தியடிகளக்கு இளம்பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர்பண்புகள் யாவை?
    1. அன்பு
    2. உண்மை
    3. உறுதி
    4. இன்னா செய்யாமை

17. காந்தியடிகள் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?

1. கதர் இயக்கம்
2. மது விலக்கு
3. தீண்டாமை ஒழிப்பு

18. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார்?

1. பகட்டான வாழ்க்கையைப் பாவம் என்கிறார் காந்தி.

19. எவற்றை அறநெறியாகப் போற்றவேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்?

1. அன்பு
2. அருள்
3. எளிமை

20. இந்தியாவின் வாழ்வு குறித்துக் காந்தியடிகள் கூறுவது யாது?

1. இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வுதான்.
2. அந்தந்த கிராமங்களின் வாழ்வு. அந்த நாட்டின் உழவர்கள், இளைஞர்கள் கையில்தான் உள்ளது.

21. இராமலிங்கர் எங்கு, எப்போது பிறந்தார்?

1. மருதூரில் பிறந்தார்.
2. 05.10.1823இல் பிறந்தார்.

22. வள்ளலாரின் முழக்கம் யாது?

”அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை” என்பதாகும்.

23. சத்திய தருமச்சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?

சாதி, மத வேறுபாடின்றி பசித்தவர்க்கெல்லாம் உணவிட்டார்.

24. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறுதல்வேண்டும்?

மேனிலைக்கல்வி தேர்ச்சி பெற்றிருத்தல்வேண்டும்.

25. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை?

1. உயிரித் தொழில்நுட்பத்துறை
2. நுண்ணியல்தொழில்நுட்பத்துறை

26. பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்கனை எழுதுக.

1. தமிழ் (இளங்கலை)
2. ஆங்கிலம் (இளங்கலை)
3. கணிதம் (இளம் அறிவியல்)
4. வரலாறு (இளங்கலை)

ஆகியன ஆகும்.

27. இடைநிலையாசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.

1. மேனிலைக் கல்வி தேர்ச்சி அடைந்திருக்கவேண்டும்.
2. இரண்டாண்டுகள் பயிற்சி நடைபெறும்
3. இரண்டாடுகள் பயிற்சி முடித்துத் தேர்ச்சி பெற்றபின், இடைநிலையாசிரியராகப் பணிபுரியலாம்.

## சிறு வினாக்கள் (4 மதிப்பெண்)

## *செய்யுட்பகுதி*

(இயல் – 2,3,4,8,10)

**1.வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?**

**வாயிற்காவலன் பாண்டிய மன்னனை வாழ்த்துதல்**

*"வாழியெம் கொற்கை வேந்தே வாழி*
*தென்னம் பொருப்பின் தலைவ வாழி*
*செழிய வாழி தென்னவ வாழி*
*பழியொடு படராப் பஞ்சவ வாழி"*

1. **கொற்கை** என்னும் துறைமுகத்தின் பாண்டிய மன்னனே வாழ்க!
2. தெற்குப் பகுதியில் உள்ள **பொதியமலைக்குத்** தலைவனே வாழ்க!
3. **செழியனே** வாழ்க!
4. தமிழ்நாட்டின் **தென்பகுதித் தலைவனே** வாழ்க!
5. இதுவரை **பழிச்சொற்கள் சேராத பஞ்சவனே** வாழ்க!

என்று வாயிற்காவலன், பாண்டிய மன்னனை வாழ்த்தினார்.

**2.கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறியவற்றை எழுதுக.**

**கண்ணகி குறித்த வாயிற்காவலன் கூறியன**

*'பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி*
*வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்*
*அறுவர்க் கிளைய நங்கை இறைவனை*
*ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்*
*கானகம் உகந்த காளி தாருகன்*
*பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்*
*செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்'*

1. பீறிட்டு எழும் குருதி ஒழுகும் பிடர்த்தலை பீடத்தில் ஏறிய இளங்கொடியாகிய **கொற்றவையும் அல்லள்**.
2. கன்னியர் ஏழுவருள் இளையவளாகிய **பிடாரியும் அல்லள்**
3. இறைவனை நடனமாடச் செய்த **பத்ரகாளியும் அல்லள்**
4. அச்சம்தரும் காட்டைக் கொண்ட **காளியும் அல்லள்**
5. **தாருகனின்** மார்பைப் பிளந்த **துர்க்கையும் அல்லள்**
6. உள்ளத்தில் **கருவும் சினமும்** கொண்டு. வேலைப்பாடமைந்த **சிலம்பொன்றைக் கையில் ஏந்தி நம் வாயிலின் முன்னே கணவனை இழந்த ஒருத்தி** நிற்கின்றாள்.

என்று கண்ணகி குறித்து வாயிற்காவலன் கூறுகின்றார்.

**3.சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள் யாவை?**

**சிலப்பதிகாரம் காட்டும் சோழநாட்டு மன்னர்களின் சிறப்புகள்**

*"எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்*
*புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்*
*வாயிற் கடைமணி நடுநா நடுங்க*
*ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்*
*அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்"*

**சிபி மன்னன்**

1. இகழ்ச்சி இல்லாத சிறப்புடைய **தேவர்கள் வியக்க, புறாவின் துன்பத்தைப்போக்க,** தன் **சதையை அறுத்தவன் சிபி** மன்னன்.

**மனுநீதிச்சோழன்**

2. அரண்மனை **வாயில் மணி ஒலித்ததைக்** கேட்டுப் **பசுவின் துயரத்தை** அறிந்து, தன் ஒப்பற்ற **மகனையே தேர்ச்சக்கரத்திலிட்டுக் கொன்றவன்** மனுநீதிச்சோழன்.

இவையே சிலப்பதிகாரம் காட்டும் சோழ மன்னர்களின் சிறப்புகள் ஆகும்.

**4.கண்ணகிக்குப் பாண்டியன் நெடுஞ்செழியன் கூறிய மறுமொழி யாவை?**

*பாண்டியன் நெடுஞ்செழியன் மறுமொழி*

*“..........................................பெண்ணணங்கே*
*கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று*
*வெள்வேற் கொற்றங் காண்...................“*

பாண்டின் நெடுஞ்செழியன் கண்ணகியிடம், “**கள்வனைக் கொல்வது கொடுங்கோலன்று. அதுவே அரச நீதி**” என்றான்.

**5.செந்தமிழைச் செழுந்தமிழாய்ச செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் யாவை?**

**பாரதிதாசன் கூறும் வழிகள்**

*தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெல்லாம் செய்து*
*செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்*

1. **எளிமையான நடையில்** எழுதவேண்டும்.
2. **புதிய இலக்கணநூல்களை** எழுதவேண்டும்
3. உலகின் **புதிய ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி விளக்கப்படங்களுடன்** நூலாக்கவேண்டும்.

இவையே செந்தமிழைச்செழுந்தமிழாய்ச் செய்வதற்குப் பாரதிதாசன் கூறும் வழிகள் ஆகும்.

**6.தமிழ் மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை?**

**பாரதிதாசன் கூறும் வழிகள்**

*தலைமுறைகள் பலகழித்தோம் குறைகளந்தோ மில்லை*
*தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்*

1. பலதுறை நூல்களை **யாவரும் படிக்கும்வண்ணம் தமிழில்** வெளியிடவேண்டும்.
2. **தமழிறிவை மதங்களில்** சாய்க்காமைவேண்டும்.
3. **ஊர்தோறும் இலவச நூல்நிலையங்களை** ஏற்படுத்தவேண்டும்.

இவையே பாரதிதாசன் கூறும் வழிகள் ஆகும்.

**7.கம்பராமாயணம் – சிறுகுறிப்பு வரைக.**

**கம்பராமாயணம்**

1. **வான்மீகி ராமாயணத்தைத் தழுவிக் கம்பர்** இயற்றினார்
2. **பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்தகாண்டம்** என ஆறு காண்டங்களை உடையது.
3. **பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணத்தை** முழுமையாகப் பெற்றது
4. **பொருள், அணி, நடை** ஆகியவற்றால் சிறந்தது.
5. **கற்போர்க்கு இனிமை தரும் கவிச்சுவை** நிறைந்தது.
6. **சொற்சுவையும் பொருட்சுவையும் தமிழ்ப்பண்பாடும்** மிளிர்ந்தது.

இவையே கம்பராமாயணம் பற்றிய சிறுகுறிப்புகள் ஆகும்.

**8.சீதை, இலக்குவன் ஆகியோரிடம் குகனைப்பற்றி இராமன் கூறியதென்ன?**

**குகனைப்பற்றி இராமன்**

*“காதல னாகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்*
*யாதினும் இனிய நண்ப இருத்திரண்டு எம்மொ டென்றான்”.*

1. இவன் **நம்மிடத்து நீங்காத அன்புடையவன்**
2. எல்லாவற்றிலும் இனிய நண்பனே **இவ்விடத்தில் எம்மொடு இருப்பாயாக**

என்று குகனைப் பற்றி இராமன் கூறினார்.

**9.விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?**

**இராமன் கூறியவை**

*“அரியதாம் உவப்ப உள்ளத் தன்பினால் அமைந்த காதல்*
*தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த வன்றே”*

1. **அன்பினால் எழுந்த பரிவின்** காரணமாகக் குகன் கொண்டு வந்த **இப்பொருள்கள் கிடைத்தற்கரியன**
2. **அமுதத்தைவிடச்** சிறந்தன
3. இவை எப்படியாயினும் **அன்பு கலந்ததால் தூய்மையானவை**.
4. **எம்போன்றவர்க்கு** உரியன
5. ஆகையால் இனிமையான இவை. நாங்கள் **விரும்பி உண்டதற்குச் சமம்**

என்று விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறினார்.

**10.தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை** நற்றிணைப் பாடல்வழித் தொகுத்து எழுதுக.

**தலைவனுக்குத் தோழி கூறும் செய்தி**

*நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்*
*தன் செய்வினைப் பயனே*
*...........................................................................................*
*மென்கண் செல்வம் செல்வமென் பதுவே.*

**முன்வினைப் பயன்**

1. **அரசனால் சிறப்பு அடைவது, யானை, தேர், குதிரையில்** அரசர் **முன் செல்வது** செல்வமன்று.
2. அது **அவரவர் முன்வினைப் பயன்** மட்டும்.

**செல்வம்**

1. புகலிடம் வந்து **எளியோரைக் கைவிடாமல் காக்கும் மென்மையான பண்பே செல்வம்** எனச் **சான்றோர்** கூறுகின்றனர்.

இவையே தலைவனுக்குத்தோழி கூறும் நற்றிணை செய்திகள் ஆகும்.

**11.சான்றோர் நட்புக்கு உவமையாகக் கருதப்படுவன யாவை?**

**சான்றோர் நட்புக்கு உவமையாகக் கருதப்படுவன**

*பொன்னும் துகிலும் முத்தும் மன்னிய*
*மாலை பயந்த காமரு மணியும்*

1. **பொன்**
2. **பவளம்**
3. **முத்து**
4. நிலைத்த பெருமலையில் பிறக்கும் **மாணிக்கம்**

ஆகியன ஆகும்.

**12.சீறாப்புராணம் குறிப்பு எழுதுக.**

**சீறாப்புராணம்**

1. **நபிகள் நாயகத்தின் சீரிய** வரலாற்றை எடுத்தியம்புகிறது
2. **சீறா – வாழ்க்கை, புராணம் – வரலாறு** எனப் பொருள்படும்.
3. **விலாதத்துக்காண்டம், நுபுவத்துக் காண்டம், ஹிஜிரத்துக் காண்டம்** என முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.
4. **5027 விருத்தப்பாக்களால்** ஆனது.
5. **இதை உமறுப்புலவர்** இயற்றினார்.

இவையே சீறாப்புராணம் பற்றிய குறிப்புகள் ஆகும்.

**13.புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?**

**புலியின் கொடுஞ்செயல்கள்**

*"நிரம்பும் வள்ளுகிர் மடங்கலின் இனங்களில் நிணமுன்*
*டிரும்ப னைக்கைமும் மதகரிக் கோட்டினை யீழ்த்திட்*
*டுரம்பி ளந்துதி ரங்களை மாந்திநின் றுறங்கா"*

1. கூர்நகங்களையுடைய **சிங்கக்கூட்டங்களன்றி, மற்ற விலங்குகளின் இறைச்சியை** உண்ணும்.
2. பனைபோன்ற தும்பிக்கையும், மூன்று மதங்களையுடைய **யானைகளின் கொம்புகளைப் பிடித்திழுத்து, அவற்றின் மார்பைக்கீறி, குருதியைக்** குடிக்கும்.
3. பெரிய மலைகள் அதிரும்படி, **இடியைவிட அதிகமாக முழங்கும்**
4. புலியின் முழக்கத்தால் **காட்டெருமைகள், பன்றிகள், கரடிகள், கலைமான்கள் கால்கள்** நிலத்தில் பதியாமல் தடுமாற்றமடைந்து **விழுந்து நடுக்கமுறும்**.

இவையே புலியின் கொடுஞ்செயல்கள் ஆகும்.

**14.நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.**

**புலியின் நிலை**

*"கண்ட போதினில் வால்குழைத் தரியமெய் கலங்கிக்*
*கொண்டு மென்மெல நடந்துதன் பெருஞ்சிரங் குனித்துத்"*

நபிகளைக் கண்ட புலியானது,

1. **வாலை வளைத்தது**.
2. அரிய **உடல் நடுக்கமுற்று** மெல்ல மெல்ல நடந்தது.
3. குளிர்ச்சி தங்கிய தளிர்போலும் **திருவடிக் காட்சி கிடைத்ததென்று**, தன் **தலையைத் தாழ்த்திப் பணிந்து வணங்கியது.**

இதுவே புலியின் செயல் ஆகும்.

**15.சாதனைப் பூக்கள் என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார்?**

**இளைந்திரையன் சுட்டுபவை**

*"சீக்கிரம் செல்க நேர்வழியில் – அதைச்*
*செத்தைகள் கூடியே தூர்க்குமுன்*
*நோக்கிய அத்திசை நேர்த்திசையில் – துளிச்*
*சோம்பலு மின்றி நடைஎடு நீ"*

1. வாழ்க்கையாகிய வழித்தடங்கள் **குப்பைக்கூளங்களால் அடைபடுமுன், நேர்வழியில் செல்க.**
2. **கால்கள்** இரண்டும் **கடப்பதற்கே.**
3. **கைகள்** இரண்டும் **புதர்களை அறுப்பதற்கே.**

4. **கண்கள்** வழிகாட்ட, **காதுகள்** துணைவர, **விண்ணைக் கீறி வழி அமைக்க**, வீர மனத்துடன் செல்க.
5. இன்று **இளைப்பாறுவோம்** **என்றில்லாமல்**, சோம்பலை ஒழித்துச் **செயலை முடித்தால்**, **வெற்றி என்னும் தேன் காதில் பாயும்**.
6. **இளைபாறாத செடி, வெற்றி** என்னும் பூக்களைப் பெற்றிடும்.

இவையே சாதனைப் பூக்கள் பற்றி இளந்திரையன் சுட்டும் கருத்துகள் ஆகும்.

## உரைநடைப் பகுதி

(இயல் – 2,3,4,6,8)

**1.பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை?**

பெண்கல்வி குறித்துப் பெரியார்

பெண்கல்வியும் சமூக மாற்றமும்

1. நமது சமுதாயத்தில் பெண்கள் சார்ந்த **தலைகீழான புரட்சி ஏற்பட்டாலொழிய**, பெரிய மாறுதல்களைக் கொண்டு வரவியலாது.
2. அப்படி **மாறுதல்கள் ஏற்பட்டாலும்** அதனால் **பயனொன்றும்** விளையாது
3. பெண்கள் **மனிதப்பிறவிகளாக நடமாட வேண்டுமானால், முதலில் அடுப்பங்கரையை விட்டு** அவர்களை **வெளியேற்றவேண்டும்**.
4. பெண்கல்வி பெறுவது அவர்கள் **உரிமை மட்டுமன்று**
5. சமூக மாற்றத்திற்கு மிக இன்றியமையாததும் ஆகும்.
6. பெண்கள் கல்வி கற்றலொழிய **சமூக மாற்றங்கள் ஏற்பட**ா.
7. ஆண்கள் **பெண்களைப் படிக்க வைக்கவேண்டும்.**

அவல நிலை ஒழித்தல்

8. அவர்களுக்கு **உலகப் படிப்பும் ஆராய்ச்சிப் படிப்பும்** தாராளமாய்க் கொடுக்கவேண்டும்.
9. நாட்டிலுள்ள கேடுகளில் எல்லாம் பெருங்கேடு **பெண்களைப் பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை.**
10. இந்த **நிலை ஒழிக்க**ப்படவேண்டும்.

என்று பெண்கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் ஆகும்.

**2.பெண்ணுரிமையை விளக்குக.**

பெண்ணுரிமை

1. **ஆணுக்குப் பெண் இளைப்பில்லை**
2. பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே **உழைக்கும் அடிமைகளாக** இருக்கக்கூடாது.
3. மனித சமுதாயத்திற்குத் **தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக** விளங்கவேண்டும்.

என்று பெண்ணுரிமையைப் பற்றிப் பெரியார் கூறுகிறார்

**3.மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?**

மணக்கொடை குறித்துப் பெரியார்

பெருநோய்

1. தமிழர்களிடையே இன்று பரவியுள்ள **பெருநோய்** ஒன்று உண்டு. அதுவே **மணக்கொடை.**
2. சமுதாயத்தில் முறையான **ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும் எற்பட்டால்தான்,** இம்மாதிரியான **தீமைகளை ஒழிக்க** இயலும்.

பந்தயக்குதிரைகள்

3. தமிழ்நாட்டு **இளைஞர்கள், மாணவர்கள், பட்டதாரிகள்** ஆகியோர் செக்குமாடாக இல்லாமல், **பந்தயக்குதிரைகளாக** மாறவேண்டும்.
4. தாமே **பாடுபட்டு உழைத்து முன்னேறவேண்டும்** என்னும் உயர்ந்த எண்ணம், நம் இளைஞர்களிடையே வளரவேண்டும்.

என்று மணக்கொடை குறித்துப் பெரியார் கூறினார்.

**4.அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?**

அம்பேத்கர் கல்வித் தகுதிகள்

<u>பள்ளிப்படிப்பு</u>

1. **1908இல் எல்பின்ஸ்டன்** பள்ளியில் தம்முடைய **உயர்நிலைப் பள்ளிப் படிப்பை** முடித்தார்.

<u>கல்லூரிப் படிப்பு</u>

2. பரோடா மன்னர் பொருளுதவியுடன் **1912இல் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம்** பெற்றார்.
3. **1915இல் அமெரிக்கா கொலம்பியா** பல்கலைக்கழகத்தில் **முதுகலைப்பட்டம்** பெற்றார்.
4. **1916இல் இலண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம்** பெற்றார்.
5. **அறிவியல் முதுகலைப் பட்டமும், பாரிஸ்டர் பட்டமும்** இலண்டனில் பெற்றார்.

இவையே அம்பேத்கர் பெற்ற கல்வித்தகுதிகள் ஆகும்.

**5.கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?**

**கல்வி வளர்ச்சியில் அம்பேத்கர்**

<u>கல்விக்கழகம்</u>

1. **1946**ஆம் ஆண்டு, **மக்கள் கல்விக்கழகத்தைத்** தோற்றுவித்தார்.

<u>சித்தார்த்தா பல்கலைக் கழகம்</u>

2. **மும்பையில்** அவரின் அரிய முயற்சியால் உருவான **சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில்** இன்றைய **அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும்** கற்பிக்கப்படுகின்றன.

இவையே கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்தகர் ஆற்றிய பணிகள் ஆகும்.

**6.பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைதல் வேண்டும்?**

**பேச்சின் தொடக்கம்**

<u>அவையோர்</u>

1. **கேட்போரை வயப்படுத்த**வேண்டும்.
2. அவையோர் **உள்ளங்களைக் கேட்பதற்குரிய பக்குவத்தில் வைத்திருத்தல்**வேண்டும்.
3. அவையில் இருப்போரை **விளித்துச் சுருக்கமான முன்னுரையுடன்** பேசத் தொடங்குவது சிறப்பு.

<u>பொருளும் இடமும்</u>

4. பேசத் தொடங்கிய **ஓரிரு மணித்துளிகளில்** பேசப்போகும் **பொருளில் புகுந்துவிடுவது** பாராட்டுக்குரியது.
5. **இடத்திற்கும் சூழலுக்கும்** ஏற்பத் **தொடக்கவுரை அமைதல்** நன்று

இவையே பேச்சின் தொடக்கம் அமையும் முறைகளாகும்.

**7.பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.**

**பேச்சினை முடிக்கும் முறைகள்**

1. கேட்பவர் மனதில் பதியுமாறு **சுருக்கிக் கூறல்**
2. அவையோர் **இணங்கும்படி** பேச்சினை முடித்தல்
3. **உணர்ச்சியைத் தூண்டும்** விதத்தில் முடித்தல்
4. **பாராட்டி** முடித்தல்.
5. **கவிதையைக் கூறி** முடித்தல்

இவையே பேச்சினை முடிக்கும் சில முறைகள் ஆகும்.

**8.பேச்சுக்கலையில் மொழியும் முறையும் எவ்வாறு அமைதல் வேண்டும்?**

**மொழியும் முறையும்**

<u>மொழிநடை</u>

1. பேசும் மொழி **அழகியதாகவும் தெளிவாகவும் சிக்கலற்றதாகவும்** இருத்தல்வேண்டும்.
2. அழகிய **செஞ்சொற்களால் இனிமையாகவும் எளிமையாகவும் நுட்பமாகவும்** கருத்தினை உணர்த்தவல்ல சிறந்த மொழிநடை அமைதல்வேண்டும்.

<u>சொல்முறை</u>

3. சொல்லை **ஆராய்ந்து அறிந்து அளவாகப்** பயன்படுத்தவேண்டும்.
4. சொல் கிடைக்கிறதே என்று நம்மை அறியாமல் அவற்றைக் **கொட்டிவிடுதல் கூடாது.**

5. நாம் செல்லுகின்ற செய்தியை ஒருவரிடம் மிகவும் **விரைவாகச் சொல்லுதல்கூடாது.**
6. திரும்பத் **திரும்பச் சொல்லுதல் தவறு**.
7. **பொய்யுரையும் மிகைப்படுத்தலும்** வேண்டா.
8. சொல்ல நினைப்பதைத் **தெளிவாகக் காலம் அறிந்து சொல்லுதல்**வேண்டும்.

இவையே பேச்சின் மொழியும் முறையும ஆகும்.

**9.கடல் வாணிகம் குறித்து எழுதுக.**

**கடல்வாணிகம்**

**அயல்நாட்டுத் தொடர்பு**

1. கடல் வாணிகத்தில் **தமிழர்** சிறந்திருந்தனர்.
2. **பொன், மணி, முத்து, துகில்**கொண்டு கடல் கடந்து வாணிகம் செய்தனர்.
3. **பூம்புகார்** முதலான பெருநகரங்கள், வணிகர் வாழும் இடங்களாக இருந்தன.
4. **கிறித்துக்கு** முன்பே **கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து** ஆகிய நாடுகளுக்கு **அரிசி, மயில்தோகை, சந்தனம்** ஆகியவை தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டிருந்தன.

**சாலமன்**

5. **கி.மு. பத்தாம்** நூற்றாண்டில் **சாலமன் அரசனுக்கு யானைத் தந்தமும், மயில்தோகையும், வாசனைப் பொருள்களும்** தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.

**சாவக நாடு**

6. தமிழர்களுக்குச் **சாவகத்துடன் கடல் வாணிகத் தொடர்பு** இருந்தது.

இவையே கடல்வாணிகம் பற்றிய கருத்துகள் ஆகும்.

**10.உழவுத் தொழில் குறித்து எழுதுக.**

**உழவுத் தொழில்**

**உழுபவரே வாழ்வார்**

1. பழந்தமிழகத்தில் **உழுபவரே உயர்ந்தோராக** மதிக்கப்பட்டனர்.
2. **உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்** என்பது **திருக்குறள்.**
3. தமிழர், உழுது பயிர் செய்து **உலகைக் காக்கும் இத்தொழிலைப்** பெரிதும் போற்றினர்.
4. **உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே** என்னும் அன்றைய புகழ்மொழி இன்றும் தமிழரால் போற்றப்படுகிறது.

**மருதநிலம்**

5. உழவுக்குச் சிறப்புப் பெற்ற **மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக** வகைப்படுத்தப்பட்டு இருந்தது.
6. **மருதநிலத்தின் பெருமை** கருதியே **வேந்தனை முதன்மைப்படுத்தினர்** தமிழர்.

இவையே உழவுத் தொழில் குறித்த செய்திகள் ஆகும்.

**11.காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.**

**காந்தியடிகளைக் கவர்ந்த**
**நாடகமும் விளக்கமும்**

**நாடகம்**

1. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் **அரிச்சந்திரன் நாடகம்** ஆகும்.

**விளக்கம்**

2. உண்மையையே பேசும் **அரசர் அரிச்சந்திரனைப் பொய்பேசவைக்க**, பல இன்னல்களை உருவாக்குகிறார் **விசுவாமித்திரர்**. இதனால் **அரிச்சந்திரன் நாட்டையும் மனைவியையும் ஒரே மகனையும் இழக்கிறார். சுடுகாட்டில் பணிபுரிகிறார்.** முனிவர் பல்வேறு இன்னல்களை இழைத்தும், **"பொய்சொல்லேன்"** என்று மறுமொழி கூறினார்.

**வாய்மை உறுதி**

3. அவரது வாய்மையை நாடகம் வாயிலாக **உணர்ந்த காந்தி**, தாம் ஒரு **சத்தியவானாக இருக்கவேண்டும் என்று உறுதி**கொண்டார்.

இவையே அரிச்சந்திர நாடகமும் விளக்கமும் ஆகும்.

**12.மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?**

**மனிதநேயம்**

**தோபிமானமும் மனிதாபிமானமும்**

1. தேசாபிமானமும் மனிதாபிமானமும் **ஒன்றுதான்**.
2. நான் ஒரு **தேசபக்தன்**.
3. அதற்கு அடிப்படைக் காரணம் நான் **மனிதனாக** இருப்பதும், அதற்குமேல் **மனிதாபிமானியாக** இருப்பதும்தான்.

**மனிதத்தன்மை**

4. மனிதர்கள் **மொழியாலும் நாடாலும்** உணர்த்தப்படுவதைக் காட்டிலும் **மனிதத் தன்மையால் பிறருக்கு உணர்த்தப் பெறுவதே** சிறப்பானதாகும்.

**குறிக்கோள்**

5. உலகோர் **அனைவரும் குறிக்கோளுடைய மனிதராக இருந்தால்**, உலகமே ஒரு **நல்ல சமுதாயமாக** உருவாகும்.

இவையே மனிதநேயம் குறித்துக் காந்தியடிகள் கூறியன ஆகும்.

**13.இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?**

**இன்னாசெய்யாமை**

1. மனிதனின் **நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும்** இருந்தால்மட்டும் **போதாது**.
2. அதனை அடையும் **வழிமுறைகளும் தூய்மையானதாகப் பிறருக்குத் துன்பம் தராததாகவும்** இருக்கவேண்டும்.

என்று காந்தி இன்னா செய்யாமை பற்றிக் கூறுகிறார்

# நெடு வினாக்கள் (8 மதிப்பெண்)

## *செய்யுட்பகுதி*

**(இயல் 1-5)**

**1.ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.**

**ஒழுக்கமுடைமை**
**(நல்ல நடத்தை உடையவராதல்)**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*ஒழுக்கத்தின் உயர்வு*
*ஒழுக்கத்தின் குணமும் ஒழுக்கமின்மையின் குற்றமும்*
*ஒழுக்கத்தின் விளைவு*
*சொல், செயலால் வரும் ஒழுக்கம்*
*கருத்துரை*
*முடிவுரை*

**முன்னுரை**

**அறம், பொருள், இன்பம்** என்னும் முப்பால் வழியாக உலகத்திற்குத் தேவையான அறவுரைகளைத் திருக்குறள் எடுத்துரைக்கிறது. இக்கருத்துகள் **நாடு, மொழி, இனம், மதம், காலம்** கடந்தவை. இதனாலேயே, **“இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே”** என்று பாரதிதாசன் திருக்குறளைப் புகழ்கிறார். மனிதருக்குத் தேவையான ஒழுக்கமுடைமையைப் பற்றித் திருவள்ளுவர் கூறும் கருத்துக்களைக் கீழே காண்போம்.

**ஒழுக்கத்தின் உயர்வு**

1. ஒருவருக்கு அனைத்துச் **சிறப்புகளையும் தரும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக்** கருதிக் காக்கவேண்டும்.

   *ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
   *உயிரினும் ஓம்பப் படும்.*

2. ஆராய்ந்து பார்த்தாலும் நல்ல துணையாகும் ஒழுக்கத்தை, **விரும்பிக் காக்கவேண்டும்**.

   *பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்*
   *தேரினும் அஃதே துணை.*

**ஒழுக்கத்தின் குணமும் ஒழுக்கமின்மையின் குற்றமும்**

3. ஒழுக்கம் **உடையவர் உயர்குடியினர். இல்லாதார் இழிகுடி**யினர்.

   *ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்*
   *இழிந்த பிறப்பாய் விடும்.*

4. மறந்த கல்வியை மீண்டும் கற்கலாம். ஒழுக்கம் குறைந்தால் **குடிசிறப்பு அழியும்**.

   *மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்*
   *பிறப்பொழுக்கங் குன்றுங் கெடும்.*

5. பொறாமைக்காரனிடம் **செல்வம் நிற்காதுபோல்**, ஒழுக்கமற்றவரிடம் **உயர்வு அமையாது**.

   *அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை,*
   *ஒழுக்கம் இலான்கண் உயர்வு.*

6. ஒழுக்கமின்மையின் **குற்றங்களை அறிந்த மனவலிமையுடையோர், ஒழுக்கத்திலிருந்து** தவறார்.

*ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்*
*ஏதம் படுபாக் கறிந்து.*

7. **ஒழுக்கமுடையவர் மேன்மை** அடைவர். **ஒழுக்கமற்றவர்** அடையக்கூடாத **பழி அடைவர்**.

*ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்*
*எய்துவர் எய்தாப் பழி.*

**ஒழுக்கத்தின் விளைவு**

8. **நல்லொழுக்கம்** நன்மைக்கு **விதையாகும். தீயொழுக்கம்** என்றும் **துன்பம் தரும்.**

*நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்*
*என்றும் இடும்பை தரும்.*

**சொல், செயலால் வரும் ஒழுக்கம்**

9. **ஒழுக்கமுடையவர்** தம் வாயால் தவறியும **தீமைச் சொற்களைச் சொல்ல** இயலாது.

*ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய*
*வழுக்கியும் வாயாற் சொலல்.*

10. **உயர்ந்தவருடன் பொருந்தி** வாழும் கல்வியைக் கற்காதவர், எவ்வளவு கற்றிருந்தாலும் **அறிவில்லாதவர்** ஆவார்.

*உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்*
*கல்லார் அறிவிலா தார்.*

**கருத்துரை**

ஒரு **மனிதன் நல்ல நடத்தையுடன் வாழ்தல்**வேண்டும்.

**முடிவுரை**

திருக்குறள் கூறும் ஒழுக்கம் பற்றிய கருத்துகளைப் பின்பற்றி **நாமும் ஒழுக்கமுடையவராக வாழ்தல்வேண்டும்.**

**2.காலமறிதலை வள்ளுவர் வழி நின்று விளக்குக.**

**காலமறிதல்**
**(செயலை நிறைவேற்றுவதற்குரிய காலத்தை அறிதல்)**

**குறிப்புச் சட்டகம்**

| |
|---|
| *முன்னுரை* |
| *காலமறிதலின் சிறப்பு* |
| *காலமறிதலின் பயன்* |
| *காத்திருத்தலின் சிறப்பு* |
| *பகைவரை எதிர்கொள்ளும் முறை* |
| *செயல் செய்ய முயலுதல்* |
| *காத்திருத்தலும் செயல்படுதலும்* |
| *கருத்துரை* |
| *முடிவுரை* |

**முன்னுரை**

**அறம், பொருள், இன்பம்** என்னும் முப்பால் வழியாக உலகத்திற்குத் தேவையான அறவுரைகளைத் திருக்குறள் எடுத்துரைக்கிறது. இக்கருத்துகள் **நாடு, மொழி, இனம், மதம், காலம் கடந்தவை**. இதனாலேயே, **“இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே”** என்று பாரதிதாசன் திருக்குறளைப் புகழ்கிறார். மனிதருக்குத் தேவையான ஒழுக்கமுடைமையைப் பற்றித் திருவள்ளுவர் கூறும் கருத்துக்களைக் கீழே காண்போம்.

**காலமறிதலின் சிறப்பு**

1. **கோட்டானைப்** பகலில் **காக்கைவெல்வதுபோல்**, **பகையை** வெல்லக் கருதுபவர், **காலமறிந்து செயல்படவேண்டும்**..

> *பகல்வெல்லும் கூகையைக் காக்கை, இகல்வெல்லும்*
> *வேந்தர்க்கு வேண்டும் பொழுது.*

<u>காலமறிதலின் பயன்</u>

2. **காலத்துடன் பொருந்திய செயலை** மேற்கொள்வதே செல்வத்தை நீங்காமல் நிற்கும் **கட்டும் கயிறாகும்**.

> *பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்*
> *தீராமை யார்க்குங் கயிறு.*

3. **தகுந்த கருவிகளுடன் காலமறிந்து** செயல்பட்டால் **செய்யமுடியாத** செயல் என்று ஏதுமில்லை..

> *அருவினை என்ப உளவோ, கருவியாற்*
> *காலம் அறிந்து செயின்.*

4. **காலமும், இடமும் அறிந்து** செயல்பட்டால், **உலகமும் கைகூடும்**.

> *ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்*
> *கருதி இடத்தாற் செயின்.*

<u>காத்திருத்தலின் சிறப்பு</u>

5. **உலகம் அடைய விரும்புபவர்,** காலத்திற்காகக் கலங்காது **காத்திருப்பர்**.

> *காலம் கருதி இருப்பர் கலங்காது*
> *ஞாலம் கருது பவர்.*

6. **ஊக்கம் உடையவர் காத்திருப்பது** என்பது, **ஆட்டுக்கிடா பின்வாங்கித் தாக்குவது** போன்றதாகும்.

> *ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்*
> *தாக்கற்குப் பேருந் தகைத்து.*

<u>பகைவரை எதிர்கொள்ளும் முறை</u>

7. **அறிவுடையவர்கள். பகைவர் மீதான** சினத்தை உடனே வெளிப்படுத்தாமல், காலத்திற்காக மனதில் வைத்திருப்பர்.

> *பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்*
> *துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.*

8. பகைவரைக் கண்டால் **பணிக. பகைவருக்கு முடிவு** காலம் வரும்போது நிலைமை **தலைகீழாகும்**..

> *செறுநரைக் காணின் சுமக்க இறுவரைக்*
> *காணின் கிழக்காம் தலை.*

<u>செயல் செய்ய முயலுதல்</u>

9. **கிடைக்கும் வாய்ப்பைப்** பயன்படுத்தி, **செய்தற்கரிய** செயலைச் **செய்யவேண்டும்**.

> *எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே*
> *செய்தற் கரிய செயல்.*

<u>காத்திருத்தலும் செயல்படுதலும்</u>

1. கொக்கைப்போல் **காத்திரு. காலம் வாய்த்தபின் கொக்கைப்போல்** விரைந்து **செயல்படு**..

> *கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்*
> *குத்தொக்க சீர்த்த இடத்து..*

<u>**கருத்துரை**</u>

ஒரு மனிதன் காலத்தினையும் இடத்தினையும் அறிந்து செயலாற்றவேண்டும்..

<u>முடிவுரை</u>

திருக்குறள் கூறும் காலமறிதல் பற்றிய கருத்துகளைப் பின்பற்றி **நாமும் காலம் அறிந்து, இடத்துடன் செயல்படவேண்டும்.**

**3.தேரா மன்னா என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?**

**குறிப்புச் சட்டகம்**

| |
|---|
| *முன்னுரை* |
| *முறையீடு* |
| *சோழ மன்னர்களின் புகார்நகரம்* |
| *மணவாழ்வு* |
| *கோவலன் கொலைக்களம்படுதல்* |
| *கண்ணகி* |
| *கருத்துரை* |
| *முடிவுரை* |

<u>முன்னுரை</u>

**இயல், இசை, நாடகம்** என்னும் முத்தமிழ்க் காப்பியத்தின் வழியாக கண்ணகியின் வரலாற்றைச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது. **அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்** என்னும் முப்பெரும் உண்மைகளைக் கூறும் சிலப்பதிகாரத்தில், பாண்டிய மன்னனை நோக்கிக் கண்ணகி, **தேரா மன்னா** என்று கூறத் தொடங்கியவற்றைக் கீழே காண்போம்.

<u>முறையீடு</u>

1. "ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காதே **மன்னனே!** உன்னிடம் கூறுவது ஒன்றுண்டு **கேள்**" என்றாள் கண்ணகி.

   *தேரா மன்னா செப்புவ துடையேன்*

**<u>சோழ மன்னர்களின் புகார் நகரம்</u>**

2. தேவர்களும் வியக்கும்வண்ணம், **புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி** மன்னனும், தன் அரண்மனை வாயிலின் மணியோசை கேட்டுப் **பசுவின் துயரை அறிந்து, தன் மகனைத் தேர்க்காலிலிட்ட மனுநீதிச்சோழனும் வாழ்நத, பெரும் புகழுடைய புகார்** நகரமே, **நான் பிறந்த ஊராகும்.**

**<u>மணவாழ்வு</u>**

3. புகாரில் புகழ்மிக்க **மாசாத்துவான் மகனை மணம்புரிந்து, ஊழ்வினைப் பயனால்**, வாழ்வதற்காக, உன் **மதுரைக்கு** வந்தேன்.

   *வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்*
   *சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்*

**<u>கோவலன் கொலைக்களம்படுதல்</u>**

4. என் கால்சிலம்பை விற்றேன். காரணம் ஏதும் அறியாமல் என் கணவன் கோவலன், நற்றிரம் படரா உன் நீதியால் கொலைக்களம்பட்டான்.

   *என்கால் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்*
   *கொலைக்களப் பட்ட............*

**<u>கண்ணகி</u>**

5. அக்கொலைக்களம்பட்ட கோவலன் மனைவி, கண்ணகி என்பது என் பெயர்.

*கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி*
*கண்ணகி யென்பதென் பெயரேயெனப்.....*

**கருத்துரை**

**பாண்டியன்முன் கண்ணகி தன்னைப் பற்றி அறிமுகம் செய்துகொண்டாள்.**

**முடிவுரை**

இக்கட்டுரையில் சோழ மன்னர்களின் சிறப்பும், அரசனின் தவறிய நீதியும், கோவலனின் இறப்பும், கண்ணகியின் அறிமுகமும் கண்ணகி வாயிலாக அறியமுடிந்தது

**4.கண்ணகிக்கும் பாண்டியமன்னன் நெடுஞ்செழியனுக்கும் நடந்த சொற்போரினை உரையாடலாக அமைத்து எழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

| |
|---|
| *முன்னுரை* |
| *பாண்டியன் கேள்வி* |
| *கண்ணகி கூற்று* |
| *கண்ணகி அறிமுகம்* |
| *அரசநீதி* |
| *பரல்கள்* |
| *நானே கள்வன்! நானோ அரசன்* |
| *கருத்துரை* |
| *முடிவுரை* |

*"யாரை யோநீ மடக்கொடி யோய் எனத்"*

*"கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி"*
*"கண்ணகி யென்பதென்....."*

*"என் கால்சிலம்பு மணியுடை அரியே, எனத்"*

*"யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே"*

*"பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட*
*யானோ அரசன் யானே கள்வன்"*

*"என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென"*

**முன்னுரை**

**இயல், இசை, நாடகம்** என்னும் முத்தமிழ்க் காப்பியத்தின் வழியாக கண்ணகியின் வரலாற்றைச் சிலப்பதிகாரம் எடுத்துரைக்கிறது. **அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்** என்னும் முப்பெரும் உண்மைகளைக் கூறும் சிலப்பதிகாரத்தில், **பாண்டிய மன்னனுக்கும் கண்ணகிக்கும் நடைந்த உரையாடலைக்** கீழே காண்போம்.

**பாண்டியன் கேள்வி**

**பாண்டியன்:** இளமையான கொடி போன்றவளே! நீரொழுகும் கண்களுடன் எம்முன் வந்து நிற்கும் **நீ, யார்?**

**கண்ணகி கூற்று**

**கண்ணகி:** ஆராய்ந்து அறிந்து **நீதி வழங்காத மன்னனே! உன்னிடம் கூறுவது** ஒன்றுண்டு!

**கண்ணகி அறிமுகம்**

**கண்ணகி:** புறாவின் துன்பத்தைப் போக்கிய **சிபி மன்னனும்**, பசுவின் துயர்போக்க தன் மகனைத் தேர்க்காலில் இட்ட **மனுநீதிச்சோழனும் வாழ்ந்த** புகார் **நகரமே, நான் பிறந்த ஊர்**. அப்புகாரில் உயர்குடியான **மாசாத்துவானின் மகனை மணம்புரிந்து**, ஊழ்வினையால், நின் **மதுரை**

நகருக்கு வந்து, என் கால்சிலம்பை விற்க முயன்று, உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி, நான். கண்ணகி என்பது என் பெயர்.

<u>அரசநீதி</u>

பாண்டியன்: கள்வனைக் கொல்வது கடுங்கோலன்று. அதுவே அரச நீதி!

<u>பரல்கள்</u>

கண்ணகி: அறநெறியில் செல்லாத அரசனே! என் காற்சிலம்பு மாணிக்கப் பரல்களைக் கொண்டது!

பாண்டியன்: நீ கூறியது நல்லதே! எம்முடைய சிலம்பின் பரல்கள் முத்துகளே!

(கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பைக் கொண்டு வரச்செய்து, அவள் முன் வைத்தான். வைத்த அச்சிலம்பைக் கண்ணகி எடுத்து ஓங்கி உடைத்தாள். அதிலிருந்து வெளிப்பட்ட மாணிக்கப்பரல்கள் ஒன்று பாண்டிய மன்னனின் உதட்டில்பட்டுத் தெறித்தது. அம்மாணிக்கப் பரல்கள் கண்ட பாண்டிய மன்னன் தாழ்வுற்ற குடையனாய்ச் சோர்வுற்றான்.)

<u>நானோ அரசன்! நானே கள்வன்!"</u>

பாண்டியன்: "பொன் தொழில் செய்யும் கொல்லனின் பொய்யுரைக்கேட்டு, அறநெறி தவறிய நானோ அரசன்! நானே கள்வன்!" குடி காக்கும் என் ஆட்சி தவறியது. என் வாழ்நாள் அழியட்டும்."

(பாண்டியன் மயங்கி வீழ்ந்தான்)

<u>கருத்துரை</u>

கொல்லனின் பொய்யுரையும், ஊழ்வினையும் கோவலனைக் கொன்றது, கண்ணகியை உரையாட வைத்தது..

<u>முடிவுரை</u>

பாண்டியன் மற்றும் கண்ணகியின் உணர்ச்சி மிக்க உரையாடலில் வழியாக ஊழ்வினையும் மனிதர்களின் தவறும் அறியப்படுகிறது. இக்கட்டுரையில் மன்னன்-கண்ணகி உரையாடலை அறியமுடிந்தது

5.குகனுக்கும் இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்து எழுதுக.

குறிப்புச் சட்டகம்

*முன்னுரை*
*குகனின் சந்திப்பு*
*இராமனின் பாராட்டு*
*குகனின் வேண்டுகோள்*
*இராமனின் அனுமதி*
*குகனின் விருப்பமும் இராமனின் கூற்றும்*
*கருத்துரை*
*முடிவுரை*

*"அருத்தியன், தேனும் மீனும் அமுதினுக்கு அமைவ தாகத்"*

*"தெரிதரக் கொணர்ந்த என்றால் அமிழ்தினும் சீர்த்த வன்றே"*

*"... தீராக் காதல னாகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன்."*

*"என்னுயிர் அனையாய் நீ, இளவல்உன் இளையான், இந்*
*நன்னுத லவள்நின்கேள், நளிர்கடல் நிலமெல்லாம்*
*உன்னுடை யது, நான்உன் தொழிழல்உரி மையின் உள்ளேன்.""*

*"அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானோம்"*

<u>முன்னுரை</u>

கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டம் இரண்டாம் காண்டமாகும். இதில் ஏழாம் படலமான குகப் படலத்தில் அமைந்துள்ள **குகன்-இராமன் அன்பின் உரையாடலைக்** கீழே காண்போம்.

**குகன் சந்திப்பு**

(இராமனைக் காண குகன் வருகிறான். வரும்பொழுது தேன், மீன் கொண்டு வருகிறான்.

**குகன்:** **தேனையும் மீனையும்** பக்குவப்படுத்திக் கொண்டுவந்துள்ளேன். இதனை ஏற்றுக்கொள்வது குறித்துத் **தங்கள் கருத்து யாதோ?**

**இராமன் பாராட்டு**

**இராமன்:** **அன்புமுதிர்வு, பரிவால்** அமைந்த இப்பொருள்கள் கிடைத்தற்கரியன. **அமுதத்தைவிடச் சிறந்தன**. இவை எத்தகையனவாய் இருப்பினும், அன்பு கலந்ததெனில் **தூய்மையானவையே! எம்போன்றோர்க்கு உரியன**. ஆகையால் இனிமையான இவை, நாங்கள் **விரும்பி உண்டதற்கும் சமம்**.

**குகனின் வேண்டுகோள்**

**குகன்:** உலகிற்குச் செல்வம்போன்றவனே! தங்களை இத்தவகோலத்தில் பார்த்த என்னிரு கண்களை எழுக்க முடியாத நிலையில் உள்ள **கள்வன் நான்**. இம் மனத்துயரோடு என்னிருப்பிடம் செல்லத் துணியேன். **ஐயனே, தங்களுக்கு வேண்டிய தொண்டு செய்வேன்**.

(இதைக் கேட்ட இராமன், இலக்குவனின் சீதையின் திருமுகத்தைப் பார்த்துப் பேசினான். குகன் நம்மிடம் நீங்காத அன்புடையவனாக இருக்கிறான் என்றான். பிறகு குகனைப் பார்த்துப் பேசினான்.)

**இராமனின் அனுமதி**

**இராமன்:** எல்லாவற்றினும் இனிய நண்பனே! **இவ்விடத்தில் எம்மோடு இருப்பாயாக**!

(இதைக் கேட்டபின் குகன், இராமனின் குறிப்பு அறிந்து, அந்தணர்களிடம் இருந்து விடைபெற்ற இராமன், இலக்குவன், சீதை ஆகியவர்களை ஏற்றிக்கொண்டு, படகை விரைவாகச் செலுத்தினான். தன்னுடன் வரவிரும்பிய குகனை நோக்கி இராமன் கூறத்தொடங்கினான்)

**குகனின் விருப்பமும் இராமனின் கூற்றும்**

**இராமன்:** **என் உயிர்** போன்றவன் **நீ. இலக்குவன் உன் தம்பி. சீதை உன் கொழுந்தி**. இந்நிலவுலகம் உன்னுடையது. **நான் உனது ஆளுகைக்குரியவன்**. துன்பமும் இன்பமும் இயற்கையே. இப்பிரிவு இடைக்காலத்தது. வருந்தாதே. **அன்புள்ள நாம் இனி ஐவர்கள் ஆனோம்**.

**கருத்துரை**

அன்பினால் வந்த உறவினால் குகனும் இராமனும் **உடன்பிறவா உறவானார்கள்**.

**முடிவுரை**

இதுவே அன்பும், பண்பும் மிக்க குகன்-இராமன் உரையாடல் ஆகும்.

**6.கங்கையின் மறுகரை அடைந்த குகனிடம் இராமன் கூறியவற்றைத் தொகுத்தெழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

| |
|---|
| *முன்னுரை*<br>*இராமனின் கூற்றுகள்*<br>*கருத்துரை*<br>*முடிவுரை* |

*"என்னுயிர் அனையாய் நீ, இளவல்உன் இளையான், இந்*
*நன்னுத லவள்நின்கேள், நளிர்கடல் நிலமெல்லாம்*
*உன்னுடை யது, நான்உன் தொழிழல்உரி மையின் உள்ளேன்.""*

*"முன்புளெம் ஒருநால்வேம் முடவுள தென உன்னா*
*அன்புள இனிநாம்ஓர் ஐவர்கள் உளரானோம்"*

<u>முன்னுரை</u>

கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டம் இரண்டாம் காண்டமாகும். இதில் ஏழாம் படலமான குகப் படலத்தில் அமைந்துள்ள குகன்-இராமன் அன்பின் உரையாடலில், **மறுகரை அடைந்த இராமன், குகனிடம் கூறியதைக் கீழே காண்போம்.**

(இராமனுடன் இருக்க குகன் விரும்பினான். ஆனால் மறுகரை அடைந்த இராமன் குகனிடம் உள்ள உறவைப் பாராட்டிப் பின்பு பிரிவதற்குமுன் சில செய்திகளைக் கூறினான்)

<u>இராமனின் கூற்றுகள்</u>

இராமன்: **என்** உயிர் போன்றவன் **நீ. இலக்குவன் உன் தம்பி.** ***சீதை* உன் கொழுந்தி.** இந்நிலவுலகம் உன்னுடையது. **நான் உனது ஆளுகைக்குரியவன்.**

துன்பம் உண்டாயின் அதை அடுத்து இன்பமும் தோன்றுவது இயற்கை. இப்பிரிவு இடைக்காலத்தது. அதனை நினைத்து வருந்தாதே. நாங்கள் உடன் பிறந்தோர் நால்வராய் இருந்தோம் விரிந்த அன்பினால். **நாம் இனி ஐவர்கள் ஆனோம்.**

.

<u>கருத்துரை</u>

அன்பினால் வந்த உறவினால் குகனும் இராமனும் உடன்பிறவா உறவானார்கள்.

<u>முடிவுரை</u>

இதுவே கங்கைக் கரை அடைந்த இராமன், குகனைப் பார்த்துக் கூறியவை ஆகும்.

**7.அப்பூதியடிகள் திருநாவுக்கரசர்மேல் கொண்டிருந்த பற்றினை விவரிக்க.**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*பொருள்களுக்குப் பெயர்சூட்டல்*
*பிள்ளைகளுக்குப் பெயர்சூட்டல்*
*தண்ணீர்ப்பந்தலுக்குப் பெயர்சூட்டல்*
*உணவளித்தல்*
*கருத்துரை*
*முடிவுரை*

*"அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்*
*உளஎலாம் அரசின் நாமம் சாற்றும்அவ் வொழுக லாற்றார்"*

*."பந்தருடன் அமுதமாம் தண்ணீரும் பார்த்தருளிச்*
*சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்*
*சந்தமுற வரைந்ததனை எம்மருங்கும் தாங்கண்டார்"*

<u>முன்னுரை</u>

உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான் பெரியபுராணம் என்றார் திரு.வி.க. தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒனபதின்மரும் ஆக எழுபத்திருவருள் ஒருவரான அப்பூதியடிகள் நாயனார் திருநாவுக்கரசர்மேல் அளவற்ற பற்றுக்கொண்டவர். தம்முடைய எல்லா பொருளுக்கும் உயிர்களுக்கும் திருநாவுக்கரசர் பெயர்சூட்டி மகிழ்ந்தவர். இக்கட்டுரையில் திருநாவுக்கரசர்மேல், அப்பூதியடிகளுக்கிருந்த பற்றினைக் காண்மோம்.

<u>பொருட்களுக்குப் பெயர் சூட்டல்</u>

1. குற்றமற்றவரும், சிவபக்தி மிக்கவரும், திருநாவுக்கரசரிடம் நீங்காத பேரன்புடையவருமான அப்பூதியடிகள் தம் வீட்டிலுள்ள **அளவைக் கருவிகள், துலாக்கோல், மக்கள், பசுக்கள், எருமைகள், மற்றுமுள்ள எல்லாவற்றிற்கும் திருநாவுக்கரசர்** எனப் பெயர் சூட்டினார்.

<u>பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டல்</u>

2. தம் பிள்ளைகளுக்கு **மூத்த திருநாவுக்கரசு, இளைய திருநாவுக்கரசு** எனப் பெயர் வைத்தார்.

<u>தண்ணீர்ப்பந்தலுக்குப் பெயர் சூட்டல்</u>

3. அளவற்ற மக்கள் நடந்து செல்லும் வழியில், கோடையின் **மிகுந்த வெப்பத்தினைப் போக்கியருளும்** கருணைமிக்க **பெரியோர் உள்ளம் போன்றும் நீரத்தடாகம் போன்றும்** அமைந்த குளிர்ச்சி பொருந்திய தண்ணீர்ப்பந்தலை அப்பூதியடிகள் அமைத்தார். அமைத்தது மட்டுமல்லாமல், அதற்கு, **"திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல்"** எனப் பெயர் சூட்டினார்.

<u>உணவளித்தல்</u>

4. திருநாவுக்கரசருக்கு உண்ண **வாழைக்குருத்து அரிய** சென்ற மூத்த திருநாவுக்கரசை பாம்பு தீண்டியது. இதை அறிந்த அப்பூதியடிகள், திருநாவுக்கரசர் பசி மிகுதியால் இருப்பார் என்று எண்ணி, தன் மகன் இறந்ததை மறைத்து உணவளிக்க முயன்றார். இதில் **திருநாவுக்கரசர்மீது உள்ள பற்றினால், தன் மகனின் இறப்பையும் அப்பூதியடிகள் பொருட்படுத்தவில்லை**.

<u>கருத்துரை</u>

திருநாவுக்கரசர்மீது **அப்பூதிடிகள் பேரன்பும** கொண்டிருந்தார்..

<u>முடிவுரை</u>

திருநாவுக்கரசர்மீது அப்பூதியடிகள் பற்றுக்கொண்டிருந்ததாலேயே, அனைத்திற்கும் திருநாவுக்கரசர் பெயர்சூட்டியதை, தன் மகனின் இறப்ப மறைத்ததை அறிய முடிகிறது.

**8.திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தலைக் கண்டு வியந்த நிகழ்ச்சியினைத் தொகுத்து எழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*தண்ணீர்ப்பந்தல் காணுதல்*
*தன் பெயர்கண்டு வியப்புறுதல்*
*பெருமை கூறல்*
*கருத்துரை*
*முடிவுரை*

*“அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்*
*உளஎலாம் அரசின் நாமம் சாற்றும்அவ் வொழுக லாற்றார்”*

*.”பந்தருடன் அமுதமாம் தண்ணீரும் பார்த்தருளிச்*
*சிந்தைவியப் புறவருவார் திருநாவுக் கரசெனும்பேர்*
*சந்தமுற வரைந்ததனை எம்மருங்கும் தாங்கண்டார்”*

<u>முன்னுரை</u>

உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான் பெரியபுராணம் என்றார் திரு.வி.க. தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒனபதின்மரும் ஆக **எழுபத்திருவருள் ஒருவரான அப்பூதியடிகள் நாயனார் திருநாவுக்கரசர்மேல் அளவற்ற** பற்றுக்கொண்டவர். தம்முடைய எல்லா **பொருளுக்கும் உயிர்களுக்கும் திருநாவுக்கரசர் பெயர்சூட்டி மகிழ்ந்தவர்**. திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தலை அமைத்தார். இக்கட்டுரையில் அப்பூதியடிகள் அமைத்த தண்ணீர்ப்பந்தலைக் கண்டு திருநாவுக்கரசர் வியந்ததைக் காண்மோம்.

<u>தண்ணீர்ப்பந்தலுக்குப் பெயர் சூட்டல்</u>

1. அளவற்ற மக்கள் நடந்து செல்லும் வழியில், கோடையின் **மிகுந்த வெப்பத்தினைப் போக்கி**யருளும் கருணைமிக்க **பெரியோர் உள்ளம் போன்றும் நீரத்தடாகம் போன்றும்** அமைந்த குளிர்ச்சி பொருந்திய தண்ணீர்ப்பந்தலை அப்பூதியடிகள் அமைத்தார். அமைத்தது மட்டுமல்லாமல், அதற்கு, **“திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல்”** எனப் பெயர் சூட்டினார்.

<u>தண்ணீர்ப்பந்தலைக் கண்டு வியத்தல்</u>

2. தண்ணீர்ப்பந்தல் வந்தடைந்த வாகீசர் இளந்தென்றல் காற்று வீசும் குளிர்ச்சி மிக்க் **தண்ணீர்ப்பந்தலையும் அமுதமாகிய தண்ணீரையும்** கண்டார். அப்பந்தலில், **திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல்** என அழகாக எழுதியுள்ளதைக் **கண்டு வியப்புற்றார்**.

.

<u>கருத்துரை</u>

திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தலைக் கண்ட திருநாவுக்கரசர் வியப்புற்றார்..

<u>முடிவுரை</u>

திருநாவுக்கரசர்மீது அப்பூதியடிகள் **பற்றுக்கொண்டிருந்ததாலேயே,** தண்ணீர்ப்பந்தலுக்கு அவர்தம் பெயரைச் சூட்டினார். அதைக்கண்ட **திருநாவுக்கரசர்** வியந்ததைக் கண்டோம்.

**9.அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததனை விவரிக்க.**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*அமுதுண்ண இசைதல்*
*மூத்த திருநாவுக்கரசை அனுப்புதல்*
*பாம்பு தீண்டல்*
*திருவமுது உண்ண அழைத்தல்*
*அப்பூதியடிகள் விடை*

*திருநாவுக்கரசர் வினா*
*உயிர்ப்பித்தல்*
*கருத்துரை*
*முடிவுரை*

<u>முன்னுரை</u>

உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான் பெரியபுராணம் என்றார் திரு.வி.க. தனியடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒனபதின்மரும் ஆக எழுபத்திருவருள் ஒருவரான அப்பூதியடிகள் நாயனார் திருநாவுக்கரசர்மேல் அளவற்ற பற்றுக்கொண்டவர். தம்முடைய எல்லா பொருளுக்கும் உயிர்களுக்கும் திருநாவுக்கரசர் பெயர்சூட்டி மகிழ்ந்தவர். திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தலை அமைத்தார். இக்கட்டுரையில் அப்பூதியடிகள் இல்லத்தில் நிகழ்ந்ததைக் காண்போம்.

<u>அமுதுண்ண இசைதல்</u>

*“தேசமுய்ய வந்தவரைத் திருவமுது செய்விக்கும்*
*நேசமுற விண்ணப்பம் செயஅவரும் அதுநேர்ந்தார்.”*

1. அப்பூதியடிகள் திருநாவுக்கரசரை ஓர் இருக்கையில் உட்காரச் செய்து, பூசித்து, திருநீற்றுக் காப்பணிந்து, நாடுய்ய வந்தவரை திருவமுது செய்தருள விண்ணப்பிக்க, திருநாவுக்கரசரும் இசைந்தார்.

<u>மூத்த திருநாவுக்கரசரை அனுப்புதல்</u>

*“சேயவர் தம்மில் மூத்த திருநாவுக் கரசை வாழை*
*மேயபொற் குருத்துக் கொண்டு வாஎன விரைந்துவிட்டார்”*

2. அப்பூதியடிகள் தூய காய்கறிகளைக்கொண்டு அறுசுவையுடன் இனிய அமுதாக்கிச் செய்தார். தங்களின் குழந்தைகளில் மூத்த திருநாவுக்கரசை அழைத்து, மிக இளமையான வாழைக்குருத்தை விரைவாகச் சென்று அரித்து வருமாறு கூறினார்.

<u>மூத்த திருநாவுக்கரசரைப் பாம்பு தீண்டல்</u>

“மல்லலம் குருத்தை ஈரும் பொழுதினில் வாள ராவொன்று
அல்லலுற் றழுங்கிச் சோர அங்கையில் தீண்டிற் றன்றே.”

3. “நல்ல தாயும் தந்தையும் ஏவ, பணி செய்யும் பேறு பெற்றேன்” என்று, மூத்த திருநாவுக்கரசு மனமகிழ்ந்து விரைந்து தோட்டத்தினுள் நழைந்து, இளங்குருத்தினை அரியும்போது, பாம்பொன்று, கூரிய பற்களால் மூத்த திருநாவுக்கரசரைத் தீண்டியது..

<u>திருவமுது உண்ண அழைத்தல்</u>

*“விளங்கிய குறியும் கண்டு விடத்தினால் வீழ்ந்தான் என்று*
*துளங்குதல் இன்றித் தொண்டர் அமுதுசெய் வதற்குச் சூழ்வார்.”*

4. மயங்கி வீழ்ந்த மகனின் குருதி வழியும் வடுவையும் உடற்குறியையும் கண்டு, விடத்தினால் மூத்த திருநாவுக்கரசு இறந்தான் என்பதை அறிந்தும், மனவருத்தம் சிறிதுமின்றி, திருநாவுக்கரசர் திருவமுது செய்தவற்குரிய சூழலை எண்ணினர்.

<u>அப்பூதியடிகள் விடை</u>

*“யாதும்ஒன் றுரையார் இப்போது இங்கவன் உதவான் என்றார்.”*

5. “திருநீறு அணிய மூத்த திருநாவுக்கரசரைக் காட்டுக” என்றார் திருநாவுக்கரசர். நிகழ்ந்த ஒன்றையும் கூறாமல், “இப்போது இங்கு அவன் உதவான்“ என்றார் அப்பூதியடிகள்.

<u>திருநாவுக்கரசர் வினா</u>

*“யாதும்ஒன் றுரையார் இப்போது இங்கவன் உதவான் என்றார்.”*

6. இதைக் கேட்ட திருநாவுக்கரசரின் திருவுள்ளத்தில் தடுமாற்றம் ஏற்பட்டது. **“தாங்கள் கூறிய கருத்தினை என்னுள்ளம் ஏற்கவில்லை. உம் மகனுக்கு நிகழ்ந்தது யாது?**. உண்மையை விரித்து உரையும்?” என்று அப்பூதியடிகளிடம் கேட்டார். அப்பூதியடிகளும் கூறிவிட்டார்.

<u>உயிர்ப்பித்தல்</u>

*“ஆவிதீர் சவத்தை நோக்கி அண்ணலார் அருளும் வண்ணம்*
*பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வித்தார்.”*

7. உயிர் நீங்கிய பிள்ளையின் உடலைக் கொண்டுவரச் செய்தார். சிவபெருமான் அருளும்படி வேண்டி, **“ஒன்றுகொலாம்” எனத் திருப்பதிகம் பாடி, பாம்பின்விடத்தைத்** திருநாவுக்கரசர் போக்கி அருளினார்..

<u>கருத்துரை</u>

திருநாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசைப் பிழைக்கச் செய்தார்.

<u>முடிவுரை</u>

திருநாவுக்கரசர்மீது அப்பூதியடிகள் **பற்றுக்கொண்டிருந்ததாலேயே,** தன் மகன் இறந்த்தை மறைத்து அமுது படைக்க எண்ணினார். மனத்தடுமாற்றத்துடன் செய்தி அறிந்த, திருநாவுக்கரசர் **ஒன்றுகொலாம் என்னும் பதிகம்பாடி, மூத்த திருநாவுக்கரசரை உயிர்ப்பித்தார்**. இவையே அப்பூதியடிகள் இல்லத்தில் நிகழ்ந்தவையாகும்.

**(அல்லது)**
**(இயல் 6-10)**

**9.தமிழ் எவ்விதம் செழித்து வளர்ந்ததாகத் தமிழ்விடுதூது கூறுகிறது?**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*வயலின் வரப்புகள்*
*மடைகள்*
*நல்ல ஏர்கள்*
*விதைகள்*
*விளைபொருட்கள்*
*களை எடுப்பவர்கள்*
*முடிவுரை*

<u>முன்னுரை</u>

மதுரையில் கோவில்கொண்டிருக்கும் **சொக்கநாதர்மேல்** காதல்கொண்ட பெண்ணொருத்தி, தன் **காதலைக்கூறி வருமாறு தமிழ்மொழியைத் தூது** விடுவதாகப் பொருளமைந்தது தமிழ்விடு தூது ஆகும். இதில் தமிழ் செழித்து வளர்ந்த விதத்தைக் காண்போம்.

<u>வயலின் வரப்புகள்</u>

1. **வெண்பா ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா** ஆகியவை வயலின் வரப்புகளாக அமைந்து உள்ளன

<u>மடைகள்</u>

2. **துறை, தாழிசை, விருத்தம்** என்னும் பாவினங்கள் மடைகளாக உள்ளன.

__நல்ல ஏர்கள்__

3. **மனம், புத்தி, சித்தம், அகங்காரம்** ஆகியவற்றை நல்ல ஏர்களாகக்கொண்டு சொல்லேர் உழவர்கள் உழவு செய்கின்றனர்.

__விதைகள்__

4. **வைதருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம்** ஆகிய செய்யுள் நன்னெறிகள் விதைகளாக அமைந்துள்ளன.

__விளைபொருட்கள்__

5. **அறம்,பொருள், இன்பம், வீடு** ஆகியவை நல்ல விளைபொருள்களாகின.

__களை எடுப்பவர்கள்__

6. இப்பயிர்களிடையே வளரும் களைகளாகிய **போலிப்புலவர்கள் கூட்டம் பெருகாமல் குட்டுவதற்கு அதிவீரராம பாண்டியனும், செவியை அறுப்பதற்கு வில்லிப்புதூரனும், தலையை வெட்டுதவற்கு ஒட்டக்கூத்தனும்** இருக்கின்றனர்.

7. இதனாலேயே, தமிழ் கிளைத்துச் செழித்து வளர்கிறது.

__முடிவுரை__

இக்காரணங்களாலேயே தமிழ் செழித்து வளர்வதாகத் தமிழ்விடுதூது கூறுகிறது.

**10.பெரியாரைத் துணையாகக் கொள்வது குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக..**

**பெரியாரைத் துணைக்கோடல்**

**குறிப்புச் சட்டகம்**

| |
|---|
| *முன்னுரை* |
| *பெரியாரின் இலக்கணம், தேவை* |
| *பெரியாரைத் துணைக்கொள்வதின் சிறப்பு* |
| *பெரியாரைத் துணைக்கோடலின் பயன்* |
| *பெரியாரைத் துணைக்கோடாதலின் குற்றம்* |
| *கருத்துரை* |
| *முடிவுரை* |

__முன்னுரை__

**அறம், பொருள், இன்பம்** என்னும் முப்பால் வழியாக உலகத்திற்குத் தேவையான அறவுரைகளைத் திருக்குறள் எடுத்துரைக்கிறது. இக்கருத்துகள் **நாடு, மொழி, இனம், மதம், காலம் கடந்தவை**. இதனாலேயே, **"இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே"** என்று பாரதிதாசன் திருக்குறளைப் புகழ்கிறார். மனிதருக்குத் தேவையான பெரியாரின் துணை கொள்வதைப் பற்றித் திருவள்ளுவர் கூறும் கருத்துக்களைக் கீழே காண்போம்.

__பெரியாரின் இலக்கணம், தேவை__

1. **அறம் அறிந்து,** பெரியோரின் நட்பை, ஆராய்ந்து **தேர்ந்து கொள்ளவேண்டும்.**

   *பகல்வெல்லும் கூகையைக் காக்கை, இகல்வெல்லும்*
   *வேந்தர்க்கு வேண்டும் பொழுது.*

2. நம் **துன்பத்தைப்போக்கி, மீண்டும் வராதவாறு காப்பவரை** நட்பாக்கிக்கொள்ளவேண்டும்.

   *உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்*
   *பெற்றியார்ப் பேணிக் கொளல்.*

__பெரியாரைத் துணைக்கொள்வதின் சிறப்பு__

3. அரிய **பேறுகளில், பெரியோரைப் போற்றி உறவாகக்** கொள்ளுதலே அரிதாகும்.

> *அரியவற்றுள் எல்லாம் அரிதே, பெரியாரைப்*
> *பேணித் தமராக் கொளல்.*

4. தம்மைவிட சிறந்த **பெரியோரை உறவாக ஏற்று நடத்தலே வலிமைகளுள்** வலிமையாகும்.

> *தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்*
> *வன்மையுள் எல்லாம் தலை.*

5. ஆராய்ந்தறியும் **அறிஞர்களை** உலகம் கண்ணாகக் கொண்டு நடப்பதால், **மன்னனும் ஆராய்ந்து நட்பாக்கிக்** கொள்ளவேண்டும்.

> *சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்*
> *சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.*

<u>பெரியாரைத் துணைக்கோடலின் பயன்</u>

6. **பெரியாரைச் சார்ந்து** நடப்பவருக்கு, பகைவர் செய்யும் **தீங்கு ஏதுமில்லை.**

> *தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்*
> *செற்றார் செயக்கிடந்த தில்.*

7. திருத்தும் பெரியாரைத் **துணையாகக் கொண்டு வாழ்பவரைக் கெடுப்பவர் எவருமிலர்**.

> *இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே*
> *கெடுக்குந் தகைமை யவர்.*

<u>பெரியாரைக் கோடாதலின் குற்றம்</u>

8. திருத்தும் பெரியாரின் **பாதுகாப்பைத் தேடிக்கொள்ளாத அரசன்,** பகைவரற்றுத் தானே **கெடுவான்.**

> *இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்*
> *கெடுப்பார் இலானுங் கெடும்.*

9. வணிகர்க்கு முதலீடு இல்லாமல் வருவாய் இல்லை. அதுபோல, **பெரியார் துணை இல்லாமல் நிலைத்த தன்மை இல்லை.**

> *முதலிலார்க்கு ஊதிய மில்லை மதலையாம்*
> *சார்பிலார்க் கில்லை நிலை.*

10. நல்லவரின் *நட்பைக் கைவிடுவது,* பகைவரைப் பகைத்துக் கொள்வதைவிடப் **பத்துமடங்கு தீமையானது.**

> *பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே*
> *நல்லார் தொடர்கை விடல்.*

<u>கருத்துரை</u>

**நன்னெறியில் செலுத்தும் பேரறிவுடையாரைத் துணையாகக்**கொள்ளுதல் வேண்டும்

<u>முடிவுரை</u>

திருக்குறள் கூறும் பெரியாரைத் துணைக்கோடல் பற்றிய கருத்துகளைப் பின்பற்றி **நாமும் பெரியவர்களின் உறவை மதித்துப் பேணிப் பின்பற்றி** வாழ்வோம்.

**11.பொருள்செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துகளைத் தொகுத்து எழுதுக..**

**பொருள்செயல்வகை**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*பொருளின் சிறப்பு*
*பொருளீட்டும் நெறி*
*பொருளின் பயன்*
*கருத்துரை*
*முடிவுரை*

## முன்னுரை

**அறம், பொருள், இன்பம்** என்னும் முப்பால் வழியாக உலகத்திற்குத் தேவையான அறவுரைகளைத் திருக்குறள் எடுத்துரைக்கிறது. இக்கருத்துகள் **நாடு, மொழி, இனம், மதம், காலம் கடந்தவை**. இதனாலேயே, **"இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே"** என்று பாரதிதாசன் திருக்குறளைப் புகழ்கிறார். மனிதருக்குத் தேவையான பொருளைக் கொள்ளும் விதம் பற்றித் திருவள்ளுவர் கூறும் கருத்துக்களைக் கீழே காண்போம்.

## பொருளின் சிறப்பு

1. ஒரு பொருட்டாக **மதிக்கத்தகாதவரையும் மதிக்கச் செய்யும் பொருளுக்கு** இணையானது வேறு இல்லை..

   *பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்*
   *பொருளல்ல தில்லை பொருள்.*

2. **செல்வமற்றவரை** எல்லாரும் **இகழ்வர்**. **செல்வரை** எல்லாரும் **சிறப்பு** செய்வர்..

   *இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை*
   *எல்லாரும் செய்வர் சிறப்பு*

3. செல்வம் என்னும் **அணையா விளக்கு, பகை என்னும் இருளைப்** போக்கும்.

   *பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்*
   *எண்ணிய தேயத்துச் சென்று.*

## பொருளீட்டும் நெறி

4. தீதின்றி **நல்வழியில் வந்த செல்வம், இன்பமும் அறமும்** தரும்.

   *அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து*
   *தீதின்றி வந்த பொருள்*

5. **அருள், அன்பு இல்லாமல் வந்த செல்வத்தைப்** பற்றாமல் நீக்கவேண்டும்..

   *அருளொடும் அன்பொடும் வாரப் பொருளாக்கம்*
   *புல்லார் புரள விடல்.*

6. **அரசு உரிமைப்பொருள், வரிப் பொருள், பகைவனின் பொருள்** ஆகியவை வேந்தன் பொருள்.

   *உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்*
   *தெறுபொருளும் வேந்தன் பொருள்..*

## பொருளின் பயன்

7. அன்பின் குழந்தையான **அருளானது, பொருள் என்னும் செவிலியால்** வளர்க்கப்படும்.

   *அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ்*
   *செல்வச் செவிலியால் உண்டு.*

8. தன்கைப் **பொருளால் ஒருவன் செய்யும் செயலானது**. குன்றின்மேல் நின்றபடி **யானைகளின் போரைக் காண்பது** போன்றதாகும்.

   *குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்*

*றுண்டாகச் செய்வான் வினை.*

9. பொருளைத் தேடுக. அது பகைவரின் **இறுமாப்பை அறுக்கும் படைக்கலம்** போன்றது. அதைவிடக் கூர்மையானது வேறில்லை.

   *செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்*
   *எஃகதனிற் கூரிய தில்.*

10. நல்வழியில் மிகுதியாக ஈட்டியவர்க்கு, மற்ற **அறமும் இன்பமும் ஒருசேரக்** கைகூடும்.

   *ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்*
   *ஏனை யிரண்டும் ஒருங்கு.*

<u>கருத்துரை</u>

**பொருளை ஆக்குவதற்கும் காப்பதற்கும் எனச் சில** கொள்கைகள்வேண்டும்

<u>முடிவுரை</u>

திருக்குறள் கூறும் பொருள்செயல்வகை பற்றிய கருத்துகளைப் பின்பற்றி, **நாமும் அறத்தையும் இன்பத்தையும் தரும் செல்வத்தைப் பெறுவோம்.**

**12.புலி வசனித்தப் படலத்தின் கருத்துகளைத் தொகுத்து எழதுக?**

**குறிப்புச் சட்டகம்**

| |
|---|
| *முன்னுரை* |
| *காட்டு மனிதன் கூறியது* |
| *புலியின் வாழ்விடமும் தோற்றமும்* |
| *புலியின் வெறிச்செயல்* |
| *நபிகளைப் புலி வணங்குதல்* |
| *நபியின் கட்டளையும் புலியின் புறப்பாடும்* |
| *நபி என்னும் இறைத்தூதர்* |
| *முடிவுரை* |

<u>முன்னுரை</u>

இறைவனின் தூதர் நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றை எடுத்தியம்பும் இனிய நூல் சீறாப்புராணம் ஆகும். புலி வசனித்த படலத்தில் அமைந்துள்ள கதையின் வழியாக **நபியின் இறைத்தன்மையையும், புலியின் அமைதியையும்** கீழே காண்போம்.

<u>காட்டு மனிதன் கூறியது</u>

*கொடுந்த டக்கரித் திரளெனும் குழுவினுள் ஒருவன்*
*அடைந்து சீரகு மதினடி தொழுதறை குவனால்*

1. அலைகள் பெறுக்கெடுத்தும் **ஆற்றையும், யானைகள் செல்லும் காட்டையும் கடந்து வந்த மனிதன்** ஒருவன், புலியின் கொடுஞ்செயல்களை நபிகளிடம் சொல்லத் தொடங்கினான்.

<u>புலியின் வாழ்விடமும் தோற்றமும்</u>

*பூண்ட வெள்ளெயி றிலங்கிட வாய்புலால் கமழ*
*வீண்டு முட்செறி வனத்திடை சினத்தொடு இருக்கும்*

2. ஓடை அருகே இருக்கும் காட்டில், கொடிய வரிகளுடைய புலி உள்ளது. **வாலினால் தரையை அடித்து, உடல் நிமிர்ந்து, கால்களை மடக்கித் தரையில் படுத்து, கண்களில் தீப்பொறிகளைக் கக்க, வெண்பற்கள் ஒளிவீச, வாயில் புலால் நாற்றம் வீச, முள்காட்டில்** சினத்தோடு இருக்கிறது.

<u>புலியின் வெறிச்செயல்</u>

*டிரும்ப னைக்கைமும் மதகரிக் கோட்டினை யீழ்த்திட்*
*டூரம்பி ளந்துதி ரங்களை மாந்திநின் றுறங்கா*

3. சிங்கங்களை அன்றி, மற்ற விலங்குகளின் **இறைச்சியை உண்ணும்**. **யானைகளின்** கொம்புகளைப் பிடித்து இழுத்து, அவற்றின் **மார்பினைக்கீறி, இரத்தம் குடிக்கும்**.

*பொதிந்த மெய்மயி ரெண்கினங் களுமரைப் போத்தும்*
*பதிந்த கால்தடு மாறிட வீழ்ந்துடல் பதைக்கும்*

4. **காட்டெருமைகளும், கரடிகளும், கலைமான்களும்** நிலத்தில் பதியப்பெற்ற தங்கள் கால்கள் நடுக்கமுற்று விழுந்து, **உடல் நடுங்கும்படி புலி உறுமும்.**

<u>நபிகளைப் புலி வணங்குதல்</u>

*தண்ட எிர்ப்பதத் தெரிசனைக் கெனச்சலாம் உரைத்துத்*
*தெண்டன் இட்டது வள்ளுகிர் திண்டிறல் புலியே.*

5. புலியின் இருப்பித்திற்குக் காட்டு மனிதன் அழைத்துச்செல்ல, வேலினைக் கையில் ஏந்தி வரும் நபியைப் புலி பார்த்து, **தன் வாலை வளைத்து, உடல் நடுங்க, மெல்ல மெல்ல நடந்து வந்து, திருவடிக் காட்சிக் கிடைத்ததென்று, தன் தலையைத் தாழ்த்திப் பணிந்து** வணங்கியது.

6. புலியின் தலையைத் தன் மணிக்கரத்தினால் நபிகள் தடவினார்.

<u>நபியின் கட்டளையும் புலியின் புறப்பாடும்</u>

*மன்றல் உன்றிய முகம்மதின் மலரடி வணங்கி*
*நன்று நன்றெனப் போற்றியே நடந்தது வேங்கை.*

7. **"இன்றுமுதல் உயிர்வதை செய்வது விடுத்து, வேறொரு காட்டுக்குச் செல்வாயாக"** என்று நபிகள் சொல்ல, **"நல்லது, நல்லது" என்ற புலி** அவ்விடத்தைவிட்டு நீங்கியது.

<u>நபி என்னும் இறைத்தூதர்</u>

*உடைய வன்திருத் தூதரே உண்மைபெயன் றுன்னித்*
*தினமு டைத்தநெஞ் சாயினர் அறிவினில் தெளிந்தோர்*

8. புலி வணங்கிய அற்புதத்தினால், அவர், **".இறைத்தூதர்"** என்ற உண்மையை உணர்ந்து, உறுதிகொண்ட உள்ளம் உடையவர்களாகப் பெரியோர்கள் ஆனார்கள்.

<u>முடிவுரை</u>

இப் புலிவசனித்த படலத்தின் வழியாக, நபியின் இறைத்தூது தன்மையும், புலி வசனித்த படலத்தின் கருத்தையும் அறியமுடிகிறது.

.

**13.வாழ்க்கையில் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றிக் கலித்தொகைப் பாடல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

| |
|---|
| *முன்னுரை*<br>*என்பது*<br>*படுவது*<br>*முடிவுரை* |

<u>முன்னுரை</u>

வாழ்க்கைக்குத் தேவையான அகக் கருத்தகள் அல்லாமல் புறக்கருத்துக்களையும் கலித்தொகை கூறுகிறது. **கற்றறிந்தார் ஏத்தும் கலி** எனப்போற்றப்படும் கலித்தொகையில் கூறப்பட்டுள்ள வாழ்க்கை நெறிமுறைக் கருத்துக்களைக் கீழே காண்போம்.

<u>என்பது</u>

*ஆற்றுதல் என்பதுஒன்று அலர்ந்தார்க்கு உதவுதல்*
*போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை*

1. **இல்வாழ்வென்பது** வருந்தி வந்தோர்க்கு **உதவுதல்**
2. **பாதுகாப்பு** என்பது **அன்புடையவரைப் பிரியாமல்** இருப்பது

<u>படுவது</u>

*பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்*
*.அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை*
*.......................................................................................*
*பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்.*

3. **பண்பு** எனப்படுவது **சான்றோர் வழி அறிந்து பின்பற்றுவது** ஆகும்.
4. **அன்பு** எனப்படுவது **சுற்றம் தழுவி வாழ்தல்** ஆகும்.
5. **அறிவு** எனப்படுவது **அறிவற்றவர் சொல்லைப் பொறுத்துக்**கொள்ளுதல் ஆகும்.
6. **நெருக்கம்** என்பது **வாக்கைக் காப்பாற்றுவது** ஆகும்.
7. **நிறைவு** எனப்படுவது அறியாதவாறு **மறைபொருள் காப்பது** ஆகும்.
8. **நீதிமுறை** எனப்படுவது **ஒருபால் கோடாமை** ஆகும்.
9. **பொறுமை** எனப்படுவது **இகழ்பவரைப் பொறுத்துக்** கொள்ளுதல் ஆகும்.

<u>முடிவுரை</u>

இவையே வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பற்றிக் கலித்தொகைப் பாடல் கூறுவனவாகும்.

**14.நிற்க நேரமில்லை – பாடல்மூலம் இளந்திரையன் கூறுவனவற்றைத் தொகுப்பு எழுதுக**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*காட்டு மனிதன் கூறியது*
*புலியின் வாழ்விடமும் தோற்றமும்*
*புலியின் வெறிச்செயல்*
*நபிகளைப் புலி வணங்குதல்*
*நபியின் கட்டளையும் புலியின் புறப்பாடும்*
*நபி என்னும் இறைத்தூதர்*
*முடிவுரை*

<u>முன்னுரை</u>

தமிழினத்தின் முன்னேற்றத்திற்கான படைப்புகளை அளித்தவர் சாலை.இளந்திரையன் அவர்கள். **பூத்தது மானுடம்** என்னும் தொகுப்பில் அமைந்துள்ள **நிற்கநேரமில்லை கவிதையின்** வழியாகக் கவிஞர் கூறும கருத்துக்களைக் காண்போம்.

<u>நேர்வழியில் செல்</u>

*சீக்கிரம் செல்லுக நேர்வழியில் – அதைச்*
*செத்தைகள் கூடியே தூர்க்கு முன்னே*

1. வாழ்க்கையாகிய வழித்தடம் குப்பைக் கூளங்கால் அடைபடுமுன் **நேர்வழியில்,** துளியும் சோர்வில்லாமல் **விரைந்து செல்லவேண்டும்**.

<u>வெற்றிக்கு வழி</u>

*கால்கள் இரண்டும் படைத்தவன்நீ – பெருங்*
*கல்லும் மலையும் கடப்பதற்கே*
*மேலிரு கைகள் அவைகளுண்டே – அங்கு*
*விம்மும் புதர்கள் அறுப்பற்கே*

2. கல்லும் முள்ளும் உள்ள **மலைப்பகுதியைக் கடப்பதற்கு இரண்டு கால்கள்** உள்ளன. **புதர்களைக் அழிக்க கைகள்** உள்ளன. **வழியில் செல்ல கண்களும் காதுகளும்** உள்ளன. இவற்றுடன் மன உறுதியும் இருந்தால், விண்ணையும் கடந்து வெற்றிக்கொள்ளும் வழி காணலாம்.

<u>பணி முடித்து ஓய்வு பெறுதல்</u>

*சாதனைப் பூக்களை ஏந்துமுன்னே – இங்கு*
*நல்லசெடி இளைப் பாறிடுமோ?*

3. இன்று ஓய்வெடுத்து நாளை செல்ல எண்ணினால் வழித்தடத்தில் எதுவும் நேரலாம். **பணியை முடித்து ஓய்வெடுத்தால், இனிக்கும் செய்தி** மனதில் குவியும்.

4. பூப்பதற்கு முன் செடிகள் ஓய்வுபெறுவதில்லை. செடியின் வெற்றி பூவில் உள்ளது. அதுபோல உன் **வெற்றி உன் உழைப்பில் உள்ளது.**

<u>முடிவுரை</u>

இப் புலிவசனித்த படலத்தின் வழியாக, நபியின் இறைத்தூது தன்மையும், புலி வசனித்த படலத்தின் கருத்தையும் அறியமுடிகிறது.

## *<u>உரைநடைப் பகுதி</u>*

(இயல் 1-5)

**1.செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*தொன்மை*
*தாய்மை*
*நடுநிலைமை*
*பண்பாட்டு, கலை பட்டறிவு வெளிப்பாடுகள்*
*உயர்சிந்தனை*
*முடிவுரை*

<u>முன்னுரை</u>

'திருந்திய **பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்**' என்று பரிதிமாற்கலைஞர் தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளார். செம்மொழிக்கான **பதினொரு தகுதிப்பாடுகளை** அறிவியல் தமிழறிஞர் **முஸ்தபாவும் மொழிவல்லுநர்களும்** வகுத்துள்ளனர். அத்தகுதிபாடுகளில் தமிழ் மொழிக்குரிய ஐந்தினைக் கீழே காண்போம்.

<u>தொன்மை</u>

1. முதல் மனிதன் தோன்றிய **குமரிக்கண்டத்தில், அவன் பேசிய மொழி தமிழ்** என்கின்றனர் ஆய்வாளர். **மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ச்சங்கம்** அமைத்துத் தமிழை வளர்த்தனர். இதன் தொன்மை

கருதியே **கம்பர், என்றுமுள தமிழ் என்றார்**. முதல் தகுதிக்கோட்பாடான தொன்மை, தமிழுக்குச் சாலப் பொருந்துகிறது.

<u>தாய்மை</u>

2. மூன்றாவது தகுதி தாய்மை. **கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு** முதலிய **திராவிட மொழிகளுக்கும், வடமொழியான பிராகுயிக்கும் தாயாக** விளங்கும் தமிழானது, **ஆயிரத்தெண்ணூறு மொழிகளுக்கு வேர்ச்சொற்களையும், நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப்பெயர்களையும்** தந்துள்ளது. உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகத் திகழ்கிறது தமிழ்.

<u>நடுவுநிலைமை</u>

3. **இனம், மொழி, மதம் கடந்தவை** சங்க இலக்கியங்கள். இயற்கையோடு இயைந்து, உலகம் ஏற்கும் பொதுக்கருத்துகளை உடையதால் **நடுநிலைமையைத்** தமிழ் பெறுகிறது. இது ஏழாவது தகுதியாகும்.

<u>பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடுகள்</u>

4. சங்கப் படைப்புகள் மனிதப் **பட்டறிவின் முழு வெளிப்பாடுகள்**. அறிவுடன் பொருந்துபவை. **அறத்துடன்** நிலைநிற்பவை. **பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல், யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், பிறன்மனை நோக்காப் பேராண்மை** முதலிய பண்பாட்டு நெறிகளைத் தமிழ் எடுத்துரைத்துள்ளது. இது எட்டாவது தகுதியாகும்.

<u>உயர்சிந்தனை</u>

5. தமிழில் உயர்சிந்தனை உண்டு. **"யாதும் ஊரே, யாவரும் கேளிர்" (புறநானூறு), "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" (திருக்குறள்)** என்று உயர்சிந்தனைகளை தமிழ்மொழி எடுத்துரைக்கிறது. இது ஒன்பதாவது தகுதி ஆகும்.

<u>முடிவுரை</u>

இவையே பதினொரு தகுதிப்பாடுகளில் உள்ள ஐந்து செம்மொழித் தகுதிபாடுகள் ஆகும்.

**2.பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்தெழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*பெண்கல்வி*
*பெண் உரிமை*
*சொத்து உரிமை*
*அரசுப்பணி*
*முடிவுரை*

<u>முன்னுரை</u>

பெரியாரின் பெண்விடுதலைச் **சிந்தனைகள் இரண்டு வகை**. ஒன்று, அடிப்படைத் தேவைகள். .இன்னொன்று அகற்றப்படவேண்டியவை. பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி ஆகியவற்றில் பெண்கள் நிறைவு கொள்ளும்போது சமூகம் தன்னிறைவு அடையும் என்று பெரியார் கூறுகிறார். பெரியார் கூறும் அடிப்படைத் தேவைகளைப் பற்றிக் கீழே காண்போம்.

<u>பெண்கல்வி</u>

1. பெண்கள் கல்வி **கற்றாலொழிய சமூக மாற்றங்கள்** ஏற்படாது.
2. ஆண்கள் பெண்களைப் படிக்க வைக்கவேண்டும். அவர்களுக்கு **உலகப் படிப்பும் ஆராய்ச்சிப்படிப்பும் தாராளமாய்க்** கொடுக்கவேண்டும்.

3. நாட்டிலுள்ள கேடுகளில் எல்லாம் பெருங்கேடு, பெண்களைப் **பகுத்தறிவற்ற சீவன்களாய் வைத்திருக்கும் கொடுமை**. இவ்விழிவுநிலை ஒழிக்கப்படவேண்டும்.

**பெண் உரிமை**

4. ஆணுக்குப் **பெண் இளைப்பில்லை**.
5. கணவனுக்கு மட்டும் உழைக்கும் அடிமையாக இல்லாமல், **மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ்பெற்ற பெண்மணிகளாகப்** பெண்கள் விளங்கவேண்டும்.

**சொத்து உரிமை**

6. பெண்ணடிமைக்கு முதற்காரணம் **சொத்துரிமை இல்லாமை**.
7. பெண்களுக்குச் சொத்துரிமை கிடைத்துவிட்டால், எல்லா **அடிமைத்தனங்களும் ஒழியும்**.
8. தாராளமாகவும் துணிவுடனும் முன்வந்து **சொத்துரிமைக்காகப் பெண்கள் கிளர்ச்சி**செய்யவேண்டியது, இன்றியமையாத உடனடி செயலாகும்.

**அரசுப் பணி**

9. அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப்போலவே **பெண்களும் அரசுப்பணி** பெறவேண்டும்.
10. பெண்களுக்கு **எல்லா வகையான உத்தியோகமும் கிடைக்கசெய்யவேண்டுமென்று** வற்புறுத்திக் கூறுகிறேன்.

**முடிவுரை**

பெண்களே சமூகத்தின் கண்கள் என்றவர் பெரியார். பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டவர் அவர். இவரால் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது.

**3.பெண் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளனவாகப் பெரியார் கூறுவனவற்றை எழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*குழந்தைத் திருமணம்*
*மணக்கொடை*
*கைம்மை வாழ்வு*
*முடிவுரை*

**முன்னுரை**

பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகள் இரண்டு வகை. ஒன்று, **அடிப்படைத் தேவைகள்**. .**இன்னொன்று அகற்றப்படவேண்டியவை**. அகற்றப்படவேண்டியவற்றில் உள்ள குழந்தைத் திருமணம், மணக்கொடை, கைம்மை வாழ்வு ஆகியவை எவ்வாறு பெண்கள் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளன என்பதைப் பெரியார் கூறும் கருத்துகள்வழி காண்போம்.

**குழந்தைத் திருமணம்**

1. சிற்றில் சிதைத்து விளையாடும் பருவத்தில் **பெற்றோர் செய்த வேதனை விளையாட்டு**.
2. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக **வாழ்க்கைப் பயணமா**? என்ற கேள்விகளைப் பெரியார் கேட்டார்.

**மணக்கொடை**

3. தமிழர்களிடையே பரவியுள்ள **பெருநோய்** இது.
4. சமுதாயத்தில் முறையான **ஒழுக்கமும் அன்பும் தியாக உணர்ச்சியும்** ஏற்பட்டால்தான், இம்மாதிரியான தீமைகளை ஒழிக்க இயலும்.
5. தமிழ்நாட்டு **இளைஞர்கள், பட்டதாரிகள்** ஆகியோர் செக்குமாடுகளாக இல்லாமல், பந்தயக்குதிரைகளாக மாறவேண்டும்.

**<u>கைம்மை வாழ்வு</u>**

6. கணவனை இழந்தோர் **மறுமணம் செய்துகொள்வதில் தீங்கில்லை**.

**<u>முடிவுரை</u>**

பெண்களே சமூகத்தின் கண்கள் என்றவர் பெரியார். பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டவர் அவர். இவரால் தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது.

**4.அம்பேத்கரின் அரும்பணிகள் குறித்துத் தொகுத்தெழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*வழக்குரைஞர் பணி*
*முதல் உரிமைப்போர்*
*விடுதலை உணர்வு*
*வட்டமேசை மாநாடு*
*சட்டப் பணி*
*கல்வி வளர்ச்சிப் பணி*
*பொருளாதாரப் பணி*
*முடிவுரை*

**<u>முன்னுரை</u>**

சமூகக் கேடுகளிலிருந்து விடுபடுவதே உண்மையான விடுதலையாகும். **இவ்விடுதலைச் சிந்தனையாளர்களில் அம்பேத்கரும்** ஒருவர். அம்பேத்கர் இந்தியா விடுதலைக்காக அயராது பணியாற்றினார். அப்பணிகளைப் பற்றிக் கீழே காண்போம்.

**<u>வழக்குரைஞர் பணி</u>**

1. இந்திய திரும்பிய அம்பேத்கர், **கட்டணமின்றி ஏழைகளுக்கு வாதாடி** நீதியைப் பெற்றுத் தந்தார்.

**<u>முதல் உரிமைப்போர்</u>**

2. 1927இல் மார்ச்சு மாதம் இருபதாம் நாள் அம்பேத்கர் **மராட்டிய மகாத்துக்குளத்தில்** நடத்திய தண்ணீர் எடுப்புப் போராட்டம் **மனித உரிமைக்கான முதல் போராட்டம்** ஆகும்.

**<u>விடுதலை உணர்வு</u>**

3. இந்தியாவிற்கு முழுமையான விடுதலை உணர்வு வழங்கவேண்டும். அதற்குத் **தன்னாட்சித் தகுதி வழங்கவேண்டும் என்று ஆங்கிலேயரிடம்** கூறினார்.

**<u>வட்டமேசை மாநாடு</u>**

4. **1930** ஆம்ஆண்டு **வட்டமேசை** மாநாடு நடந்தது
5. **அரைவயிற்றுக் கஞ்சிக்கு அல்லற்படும் ஊமைகளின் உறுப்பினராக** நான் பேசுகிறேன் என்று தொடங்கி, எங்கள் கைகளில் அரசியல் அதிகாரம் வந்தொலொழிய, எங்கள் குறைகள் நீங்காது என மொழிந்தார்.
6. ஒடுக்கப்பட்டோரின் இவ்வுரிமைக்குரல் வட்டமேசை மாநாட்டின் வழியே உலக அரங்கில் எதிரொலித்தது.

**<u>சட்டப்பணி</u>**

7. இந்திய அரசியலமைப்புச் **சட்டத்தை தனியாள் ஒருவராக** அம்பேத்கர் செய்து முடித்தார்.

<u>கல்வி வளர்ச்சிப் பணி</u>

8. **1946**ஆம் ஆண்டு, **மக்கள் கல்விக்கழகத்தைத்** தோற்றுவித்தார்.
9. **மும்பையில்** அவரின் அரிய முயற்சியால் உருவான **சித்தார்த்தா உயர்கல்வி நிலையத்தில்** இன்றைய **அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்துப் பாடங்களும்** கற்பிக்கப்படுகின்றன.

<u>பொருளாதாரப் பணி</u>

10. **இந்தியாவின் தேசியப் பங்குவீதம்** என்ற நூலை எழுதினார்.
11. தொழில்துறையில் பொருளாதார வளர்ச்சிப் பெறப் **புதுப்புதுக் கருத்துகளை** வெளிப்படுத்தினார்.

<u>முடிவுரை</u>

மனித உரிமைக்காக உழைத்த அம்பேத்கரின் அரும்பணிகள் அரசியல், சட்டம், பொருளாதாரம் எனப் பரந்து விரிந்தவை என்பதை இக்கட்டுரையின் வழி அறியலாகிறது.

**5.அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்?**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*அடிப்படைகள்*
*சமத்துவம்*
*மனிதநேயம்*
*முடிவுரை*

<u>முன்னுரை</u>

அம்பேத்கர் சிறந்த இலட்சியவாதி. அவருக்கு **இலட்சிய நாடாக இந்தியாவை** உருவாக்க விருப்பம். அவரின் இந்தியா எப்படியானது என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

<u>அடிப்படைகள்</u>

1. ஓர் இலட்சிய சமூகம் **சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம்** ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது.

<u>சமத்துவம்</u>

2. சனநாயகத்தின் மறுபெயர்தான் சகோதரத்துவம். சுதந்தரம் என்பது சுயேச்சையாக **நடமாடும் உரிமை. உயிரையும் உடைமையையும் பாதுகாக்கும்** உரிமை அது.
3. எல்லாருக்கும் **எல்லாம் கிடைக்கும் வகையில் எல்லா மனிதர்களையும்** ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்.

<u>மனிதநேயம்</u>

4. **சமத்துவத்தின் மறுபெயரே** மனிதநேயம். எங்கே சமத்துவம் மறுக்கப்படுகின்றதோ அங்கே மனிதப் பண்பு மறைந்துவிடுகிறது.

<u>முடிவுரை</u>

சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் மனிதநேயத்தைக் கொண்ட இந்தியாவை அம்பேத்கர் உருவாக்க எண்ணினார்.

**6.மேடைப்பேச்சு சிறப்புற அமைவதற்கான வழிகள் யாவை?**

**குறிப்புச் சட்டகம்**

| |
|---|
| *முன்னுரை*<br>*தன்மை*<br>*கருத்து*<br>*மனிதநேயம்*<br>*முடிவுரை* |

<u>முன்னுரை</u>

**ஆய கலைகள் அறுபத்து நான்கு** என்பர். அத்தகைய கலைகளுள் பேச்சுக்கலை ஒன்று. பேச்சில் வெறும்பேச்சுக்கும் மேடைப்பேச்சுக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. இக்கட்டுரையில் மேடைப்பேச்சு சிறப்புற அமைவதற்கான வழிகள் காண்போம்.

<u>தன்மை</u>

1. **உணர்ந்ததை உணர்த்தும்வகையில்** தெரிவிக்கும்
2. கேட்போரை **மதிப்பிடுவோனாக** மதிக்கும்.
3. **இனிய** முறையில் உணர்த்தும்.

<u>கருத்து</u>

4. பேச்சு வெற்றிபெற வலிமையான கருத்துகள் தேவை.
5. **கேட்டார்ப் பிணிக்கும் வகையில்** கருத்துகளைப் பேசவேண்டும்.
6. பேச்சாளரின் நெஞ்சிலே உள்ள கருத்து, **கேட்பவரின் நெஞ்சில்பாய**வேண்டும்.

<u>மொழி</u>

7. பேசும் மொழி **அழகு, தெளிவு, சிக்கலற்று** இருக்கவேண்டும்.
8. செஞ்சொற்களால் **இனிமை, எளிமை, நுட்பம்** கொண்ட கருத்தினை உணர்த்துவதே மொழியாகும்.

<u>சொல்</u>

9. சொல்லுகின்ற சொல்லுக்குத் **தனிபொருளும், தனிவேகமும்** பிறக்கின்றது. **உயிரும்** உண்டாகிறது.
10. சொல்லை **ஆராய்ந்து அறிந்து அளவாகப்** பயன்படுத்தவேண்டும்.
11. நம்மை **அறியாமல்** சொல்லைக் கொட்டக்கூடாது.

<u>திருத்தம்</u>

12. செய்தியை **விரைவாகச் சொல்லக்கூடாது**.
13. சொல்லியதைத் **திரும்பத் திரும்பச்** சொல்லுதல்கூடாது.
14. **பொய்யுரை, மிகை**ப்படுத்தல்கூடாது.

<u>காலமறிதல்</u>

15. சொல்ல நினைத்ததைத் **தெளிவாகக் காலமறிந்து** சொல்லவேண்டும்.

<u>முடிவுரை</u>

*விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்.*

என்ற குறளின்படி, இவையே மேடைப்பேச்சு சிறப்புற அமைவதற்கான வழிகள் ஆகும்.

**7.மேடைப்பேச்சின் கூறுகளை விளக்குக.**

**குறிப்புச் சட்டகம்**

| |
|---|
| *முன்னுரை*<br>*எடுத்தல்*<br>*தொடுத்தல்*<br>*பேச்சின் அணிகலன்*<br>*உணர்த்தும்திறன்*<br>*முடித்தல்*<br>*முடிவுரை* |

<u>முன்னுரை</u>

பேசும்பொருளை ஒழுங்குமுறைக்குக் கட்டுப்படுத்தித் **தொடக்கம், இறுதி, இடைப்பகுதி, முடிவு** எனப் பகுத்துப் பேசுவதனையே பேச்சுமுறை என்கிறோம். இப்பேச்சுமுறையான எடுத்தல், தொடுத்தல், முடித்தல் என்ற முக்கூறுகளைப் பற்றிக் கீழே காண்போம்.

<u>எடுத்தல்</u>

1. அவையோர் **கேட்போரை வயப்படுத்த**வேண்டும்.
2. அவையோர் **உள்ளங்களைக் கேட்பதற்குரிய பக்குவத்தில் வைத்திருத்தல்**வேண்டும்.
3. அவையில் இருப்போரை **விளித்துச் சுருக்கமான முன்னுரையுடன்** பேசத் தொடங்குவது சிறப்பு.
4. பேசத் தொடங்கிய **ஓரிரு மணித்துளிகளில்** பேசப்போகும் **பொருளில் புகுந்துவிடுவது** பாராட்டுக்குரியது.
5. **இடத்திற்கும் சூழலுக்கும்** ஏற்பத் **தொடக்கவுரை அமைதல்** நன்று

<u>தொடுத்தல்</u>

6. தொடக்கவுரைக்குப் பிறகு, **பொருளை விரித்துப் பேசும் முறை** இதுவாகும்.
7. இடையிடையே **சுவைமிக்க சொற்களும் குணமிக்க கருத்துகளும்** பிணைத்துப் பேசவேண்டும்.
8. **பல தலைப்புகளின்கீழ்** வரிசைப்படுத்திப் பேசுதல்வேண்டும்.

<u>பேச்சின் அணிகலன்</u>

9. **கருத்துப்பொலிவு, குரலோசை, உவமைகள், எடுத்துக்காட்டுகள், சொல்லாட்சிகள், பல்வேறு நடைகள், சிறு சிறு கதைகள்** ஆகியவற்றைப் பேச்சின் அணிகலன்களாக ஆக்கவேண்டும்.

<u>உணர்த்தும் திறன்</u>

10. **சுவை, நிரல்படல்கூறல், திறம், தெளிவு, உணர்ச்சி, ஊக்கம்** ஆகியவை பேச்சின் பொருண்மையாகும்.
11. கேட்போரின் உள்ளத்தில் தாம் **விரும்பிய உணர்ச்சியை ஏற்படுத்தும்படி** பேசவேண்டும்.

<u>முடித்தல்</u>

12. கேட்பவர் மனதில் பதியுமாறு **சுருக்கிக் கூறல்.**
13. அவையோர் **இணங்கும்படி** பேச்சினை முடித்தல்.
14. **உணர்ச்சியைத் தூண்டும்** விதத்தில் முடித்தல்
15. **பாராட்டி** முடித்தல்.
16. **கவிதையைக் கூறி** முடித்தல்

<u>முடிவுரை</u>

*விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தனிது*
*சொல்லுதல் வல்லார்ப் பெறின்.*

என்று குறள் கூறுகிறது. பேசுபவர் இப்பேச்சின் முக்கூறுகளையம் பயன்படுத்தி வெற்றி பெறவேண்டும்.

.

**8.திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப்பணிகளைத் தொகுத்து எழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

| |
|---|
| *முன்னுரை*<br>*கதையும் நடிகர்களும்*<br>*இயக்குநர்*<br>*திரைப்படச்சுருள்*<br>*ஒலிப்பதிவு*<br>*திரைப்படக்காட்சிப் பதிவு*<br>*முடிவுரை* |

<u>முன்னுரை</u>

**உள்ளத்தால் பேசி, உணர்ச்சிகளால் உருவாகி, மக்களைத் தன்வயப்படுத்தும்** ஆற்றல் திரைப்படத்திற்கு உண்டு. ஒரு திரைப்படம் எடுத்து முடிக்க, பல்வேறு ஆயத்தப் பணிகள் உள்ளன. அவற்றைக் கீழே காண்போம்.

<u>கதையும் மாந்தர்களும்</u>

1. முதலில் **கதை** ஆயத்தப்படுத்தப்படுகிறது. கதைக்குழு வழியாக **திரைக்கதை ஆயத்தப்படுத்தப்படுகிறது**.
2. திரைப்பட **நடிகர், நடிகையர், தோழர், தோழியர், பணியாளர்** தேர்வு ஆயத்தமாகிறது.
3. **உரையாடல், பாடல், சண்டை** ஆகியன ஆயத்தம் செய்யப்படுகின்றன.
4. நடிகரின் குரல் இசைவாக இல்லையெனில், மற்றொருவரின் **குரல் ஆயத்தம்** செய்யப்படுகிறது.

<u>இயக்குநர்</u>

5. படத்திற்கு **இயக்குநர்** அமைவர்.
6. **துணை இயக்குநர்கள்** ஆயப்படுத்தப்படுவர்.

<u>திரைப்படச்சுருள்</u>

7. படம் எடுக்க பயன்படும் **எதிர்ச்சுருள்** ஆயத்தப்படுத்தப்படும்.
8. **ஒலி, ஒளி பதிவுகள்** தொடங்க எத்தனிக்கப்படும்.

<u>ஒலிப்பதிவு</u>

9. நடிகர்களின் **நடிப்பையும் பாடும் பாடல்களையும் உரையாடல்களையும்** ஒலிப்பதிவு செய்வர்..
10. விளக்கின் **ஒளி, படச்சுருளின்** விளிம்பிலுள்ள பகுதியில் விழுந்து, அங்கு ஒலிப்பாதையைத் தோற்றுவிக்கும்.

<u>திரைக்காட்சிப் பதிவு</u>

11. **ஒளி, ஒலிப்படக்கருவி** என்னும் கருவி **திரையரங்குகளில்** திரைப்படம் காட்டப் பயன்படுகிறது.

<u>முடிவுரை</u>

*கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப்பருளும் களிப்பே*

என்ற வரி, திரைப்படத்திற்குப் பொருந்தும். அவ்வகையில் திரைப்படம் எடுப்பதற்கான ஆயத்தப் பணிகள் என்னவென்பதைக் கண்டோம்.

**9.தொழில்கல்வி, தொழில்நுட்பக் கல்வி குறித்து விரிவாக எழுதுக.**

**குறிப்புச் சட்டகம்**

| |
|---|
| *முன்னுரை*<br>*தொழிற்கல்வி*<br>*தொழிற்நுட்பக் கல்வி*<br>*முடிவுரை* |

__முன்னுரை__

நாள்தோறும் **கல்வியில் புதுப்புதுத் துறைகள்** தோன்றியபடி வருகின்றன. குறிப்பாகப் பணிவாய்ப்புக்கு உரிய கல்வித் தகுதிகளைத் தொழில்கல்வி, தொழில்நுட்பக்கல்வி, கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி ஆகியவை அளிக்கின்றன. அவற்றில் **தொழிற்கல்வி, தொழில்நுட்பக கல்வி** பற்றிக் காண்போம்.

__தொழில்கல்வி__

1. **மருத்துவம், பொறியியல், வேளாண்மை, சட்டம்** ஆகியவை தொழிற்கல்விகள்.
2. மேனிலைக்கல்வியில் உயர்மதிப்பெண் பெற்று, கலந்தாய்வில் தேர்ந்தெடுக்கப்பட்டு, கல்லூரியில் சேர்ந்து படித்து முடித்து, **தகுதிகேற்ப உள், வெளிநாடுகளில் பணிபுரிய** வாய்ப்புண்டு.
3. **வேதியியல், விலங்கியல், சுற்றுச்சூழல், வேளாண்மை, மருத்துவம்** முடித்தவர்களுக்கு தொழிற்கல்வித்துறை **சிறந்த வேலை வாய்ப்பாக** அமைகிறது.
4. தற்போது **உயிரித் தொழில்நுட்பத்துறை, நுண்ணியல் தொழில்நுட்பத்துறை** சார்ந்த தொழிற்படிப்புகள் கற்பிக்கப்படுகின்றன.

__தொழில்நுட்பக்கல்வி__

5. பத்தாம் வகுப்பில் உயர்மதிப்பெண் பெற்று, **பல்தொழில்நுட்பக்கல்லூரியில்** பயில்பவர்க்கு வேலைவாயப்புகள் பெற வாய்ப்புண்டு.
6. மேனிலைக்கல்வியில் தேர்ச்சிப்பெற்றவர்கள், **இராண்டாண்டு இடைநிலை ஆசிரியர் பயிற்சி** படித்துச் தேர்ச்சிப் பெற்று, **இடைநிலை ஆசிரியராகப்** பணியாற்றலாம்.
7. **செவிலியர், கூட்டறவுப் பயிற்சி** பெற்றும் வேலைவாய்ப்புகள் பெறலாம்..

__முடிவுரை__

*வெறுங்கை என்பது மூடத்தனம்*
*விரல்கள் பத்தும் மூலதனம்*

என்னும் **கவிஞர் தாரபாரதியின்** பாடல் வரிகளுக்கேற்பத் தன்னம்பிக்கையுடன், வேலை வாய்ப்பினைப் பெற்று, நாட்டிற்கும் வீட்டிற்கும் பயன்தரும்வகையில் வாழவேண்டும்.

**10.கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி குறித்து விவரிக்க.**

**குறிப்புச் சட்டகம்**

*முன்னுரை*
*கலை, அறிவியல் கல்வி*
*சிறுதொழில் கல்வி*
*முடிவுரை*

__முன்னுரை__

நாள்தோறும் கல்வியில் **புதுப்புதுத் துறைகள்** தோன்றியபடி வருகின்றன. குறிப்பாகப் பணிவாய்ப்புக்கு உரிய கல்வித் தகுதிகளைத் தொழில்கல்வி, தொழில்நுட்பக்கல்வி, கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி ஆகியவை அளிக்கின்றன. அவற்றில் **கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி** பற்றிக் காண்போம்.

**__கலை, அறிவியல் கல்வி__**

.

1. மேனிலைக்கல்வியில் தேர்ச்சிப் பெற்றோர் **தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், தாவரவியல், பொருளியல், வரலாறு, கணக்குப்பதிவியல், கணிப்பொறியியல், வணிகவியல்** முதலிய பிரிவுகளில் இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டம் பெறலாம்.
2. பட்டம் பெற்றோர் கல்வியியல் கல்லூரியில் **இளம் கல்வியியல் பட்டம் பெற்று ஆசிரயராகலாம்**.
3. **தமிழ்நாடு அரசுத் தேர்வாணையம், நடுவணரசு தேர்வாணையம், வங்கித்துறை, ஆயுள் காப்பீட்டுத்துறை, தொடர்வண்டித்துறை** ஆகியவற்றில் **போட்டித் தேர்வு எழுதி வேலை** வாய்ப்பு பெறலாம்.
4. **மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில்** பதிவு செய்தும் வேலைவாய்ப்புகளைப் பெறலாம்.

<u>சிறுதொழில் கல்வி</u>

5. பத்தாம் வகுப்பு தேர்ச்சி **பெற்றவர்கள், பெறாதவர்கள் சிறுதொழில்கல்வி** பயிலலாம்.
6. தொழிற்பயிற்சி நிறுவனங்களில் **ஓராண்டு, ஈராண்டுப் பயிற்சிப்** பெற்றுப் பணியில் சேரலாம்.
7. **கம்மியர், கடைசல் பிடிப்பவர், கட்டட வரைவாளர், நில அளவையாளர், தச்சர்** முதலிய படிப்புகள் உள்ளன.
8. **இயந்திரம், வாகனம், தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி** முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன.
9. அரசுப்பணிக்காகக் காத்திராமல், **சுயதொழில்** தொடங்கி, **வேலைவாய்ப்பினைப் பெருக்கவேண்டும்**.

<u>முடிவுரை</u>

*வெறுங்கை என்பது மூடத்தனம்*
*விரல்கள் பத்தும் மூலதனம்*

என்னும் **கவிஞர் தாரபாரதியின்** பாடல் வரிகளுக்கேற்பத் தன்னம்பிக்கையுடன், வேலை வாய்ப்பினைப் பெற்று, **நாட்டிற்கும் வீட்டிற்கும் பயன்தரும்வகையில்** வாழவேண்டும்.

**தயாரிப்பு – ரா. தாமோதரன், அ.மே.நி.பள்ளி., மெலட்டூர், தஞ்சை மாவட்டம் 614 301**
**உரையாடலுக்கு – 9 9 6 5 8 5 1 3 4 5**